egistered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 28 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 29 (13.11.2004) சனிக்கிழமை இதழ்:44

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 13, மென்சார வீதி, மட்டக்களப்பு.

021 222 3916, 0777 801038 (சி/2485)

# புலிகள் சமர்ப்பித்த யோசனைக்கு சந்திரிகாவிடமிருந்து பதிலில்லை!

## வெறும் கையுடன் நோர்வே குழுவினர் இன்று நாடு திரும்புவதற்கு முடிவு!

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனைக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் தரப்பிலிருந்து ஆக்கபூர்வமான பதிலெதுவும் தெரிவிக்கப்படாததால் வெறும் கையுடன் நோர்வே அனுசரணையாளர்கள் குழு இன்று கொழும்பிலிருந்து புறப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான குழுவினருடன் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் பேச்சுவார்த்தை நடத்திய நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர், கொழும்பு திரும்பியதும் நேற்றுமுன்தினம் இரவே ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகளின் தலைவருடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பான விபரத்தை ஜனாதிபதிக்கு ஜான்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செயலராக அசோக ஜெயவர்த்தன!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரான மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவை எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் நியமிக்கும் உத்தரவை ஜனாதிபதி சந்திரிகா பிறப்பித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த சிறில் ஹேரத் ஓய்வுபெற்றுச் செல்வதையடுத்தே அந்தப் பதவிக்கு மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அண்மையில்தான் இவர் யாழ்ப் பாணத்துக்கு இரண்டு நாள் இரகசிய விஜயத்தை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனித்திருந்த வயோதிபப் பெண் கழுத்து நெரித்துக் கொலை! கோண்டாவிலில் சம்பவம்

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் வீட்டில் தனித்திருந்த வயோதிப் பெண்ணொருவர் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

கோண்டாவில் இருபாலை வீதியில் அமைந்துள்ள எக்காளத்தொணி பிரார்த்தனை மண்டபத்துக்குச் சமீபமாகச் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது இதே இடத்தைச்சேர்ந்த இராசேந்திரம் தவமணிதேவி (வயது 62) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

மேற்படி வயோதிப் பெண்ணுக்கு உதவியாக இருந்துவந்த இளைஞன் இருவாரங்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து வெளியேறியிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே தூதுக்குழுவினர் ரணிலை சந்தித்துப் பேச்சு!


நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் மற்றும் விசேட சமாதானத்தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் நேற்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து சமாதான முயற்சி குறித்துப் பேச்சு நடத்தினர்.

கேம்பிறிச் ரெரசில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரைச் சந்தித்து. தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்த விபரங்களை ரணில் விக்கிரமசிங்கவிடம் நோர்வே தரப்பினர் எடுத்துச் கூறினர்.

நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் நேற்றுமுன்தினமிரவு ரணிலைச் சந்திக்கவிருந்தபோதும், அவர் அரபாத்தின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்பதற்காக அவசரமாக ஹெய்ரோவுக்கு புறப்பட்டுச் சென்றதால் இந்தச் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அரபாத்தின் பூதவுடல் ரமலாவில் அடக்கம்!

## பல இலட்சம் பேர் கண்ணீர் அஞ்சலி





எகிப்தியத் தலைநகர் ஹெய்ரோவிலிருந்து ஹெலிகொப்ரர் மூலம் கொண்டு செல்லப்பட்ட பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத்தின் சடலம் நேற்று ரமலா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பாரிஸிலுள்ள பேர்சில் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் அதிகாலை காலமான யாசீர் அரபாத்தின் பூதவுடலைத் தாங்கிய பேழை நேற்றுமுன்தினம் மாலையே ஹெய்ரோவுக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஹெய்ரோ விமான நிலையத்தில் வைத்து நேற்று அதிகாலை அரபாத்தின் பூதவுடல் தாங்கிய பேழையை எகிப்திய அதிகாரிகள் பொறுப்பேற்றனர். இதனைத்தொடர்ந்து யாசீர் அரபாத்தின் உடலைத் தாங்கிய பேழை அரச உயர் தலைவர்களுக்குரிய மரியாதையுடன் இராணுவ வீரர்களால் விமானத்திலிருந்து பீரங்கி வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கேணல் பானு, கேணல் சொர்ணம் நேற்று கிளிநொச்சி திரும்பினர்!

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் அழைப்பை அடுத்து விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதிகளான கேணல் பானு, கேணல் சொர்ணம் மற்றும் அந்த மாவட்டங்களின் அரசியற்துறைப் பொறுப்பாளர்களான இ.கௌசல்யன், சி.எழிலன் மற்றும் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த மார்ஷல் ஆகியோர் நேற்று வன்னிக்கு வந்தனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்ரரிலேயே இவர்கள் நேற்றுக்காலை வன்னியை வந்தடைந்தனர்.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் கரடியனாறு மகாவித்தியாலயத்தில் வைத்து மட்டு - அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் மற்றும் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த மார்ஷல் ஆகியோரை ஏற்றிய ஹெலிகொப்ரர், திருமலை - சம்பூர் மகாவித்தியாலயத்தில் தரையிறங்கியது. அங்கு திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், அரசியற்துறைப் பொறுப் பாளர் சி.எழிலன் ஆகியோரையும் ஏற்றியவாறு அங்கிருந்து கிளிநொச்சியை வந்தடைந்தது.

தேசியத் தலைவரின் அழைப்புக்கிணங்க வன்னி வந்துள்ள இவர்கள் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடவிருப்பதாகக் கூறப்படுகிறது.

# மாவீரர் நாள் நிகழ்வுகளை படையினர் குழப்பமாட்டார்கள்

## மட்டக்களப்பு சந்திப்பில் இணக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர் உட்பட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் தொடர்பான நிகழ்வுகளுக்கு தமது பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுமென படையினரால் வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் விடுதலைப் புலிகளுக்கும் படைத் தரப்பினருக்குமிடையில் மட்டக்களப்பில் நேற்றுச் சந்திப்பொன்று இடம்பெற்றது.

கடந்த மூன்று மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த உள்ளூர் மட்டச் சந்திப்பின் தொடராக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் முக்கியமாக விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் தொடர்பாக ஆராயப்பட்டது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் நகர அரசியற்துறை பொறுப்பாளர் அன்பு மாறன் தகவல் தெரிவிக்கையில்,

மாவீரர் தினத்திற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படுமென படைத்தரப்பால் உறுதியளிக்கப்பட்டது. தேவையேற்படும் பட்சத்தில் பாதுகாப்பு வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மாவட்ட நிர்வாகத்துறை பொறுப்பாளர் தயாமோகன், சிவமதன், பட்டிருப்புக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வா, ஊடக இணைப்பாளர் மனோஜ் ஆகியோரும்,

படைத்தரப்பில் 23 - 2 ஆவது படைப் பிரிவு கட்டளை அதிகாரி கேணல் எல்.ஆர். அமரதுங்க, விசேட பொலிஸ் அதிரடிப்படை உதவிப் பொலிஸ் அதிபர் எம்.ஸ்ரீசேன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிவாகர உட்பட பொலிஸ் மற்றும் படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு மூன்று மாத சிறைத்தண்டனை!

## பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு

(பருத்தித்துறை)

மது போதையில் லொறியை ஓட்டிச் சென்ற சாரதிக்கு மூன்று மாதச் சிறைத்தண்டனையும், ஐநூறு ரூபா குற்றப்பணமும் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியை வல்லைச் சோதனைச்சாவடியில் வைத்து நெல்லியடிப் பொலிஸார் சோதனை செய்த வேளை - லொறியை ஓட்டிச் சென்ற சாரதி மதுபோதையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த சாரதி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, மதுபோதையில் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்பின்னர் - பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் பிரஸ்தாப சாரதி ஆஜர் செய்யப்பட்டபோது, குறித்த தினத்தில் லொறியை மதுபோதையில் ஓட்டிச்சென்றதை ஒப்புக்கொண்டதையடுத்து, மூன்று மாத சிறைத் தண்டனை விதித்ததோடு, மதுபோதையில் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமைக்காக ஐநூறு ரூபா குற்றப்பணமும் செலுத்துமாறு மாவட்ட நீதிபதி பணித்தார்.

இதேவேளை- வடமராட்சிப் பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு, வாகன அனுமதிப்பத்திரம் 'இன்றி ஓட்டுதல், அளவுக்கு அதிகமான முறையில் பயணிகளை ஏற்றுதல் போன்ற பல்வேறு குற்றச்செயல்களுக்குத் துணைபோகும் வாகன் சாரதிகளுக்கு எதிராக வடமராட்சிப் பகுதிகளிலுள்ள பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)

# பட்டப்பகலில் திருட முற்பட்டவர் அயலவர்களால் மடக்கிப்பிடிப்பு!

கச்சேரி நல்லூர் வீதிக்கு அண்மையில் றக்கா வீதியில் உள்ள வீடொன்றில் - பட்டப்பகலில் திருட முற்பட்ட நபர் அப்பகுதி பொது மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது - கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் மேற்படி வீட்டில் தனித்திருந்த பெண் வீட்டின் பின்புறம் சென்றதை அவதானித்த திருடன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்டுத்தி வீட்டின் முன்புற வாசலினூடாக உள்ளே நுழைந்து அங்குள்ள பொருட்களைத் திருட முற்பட்டவேளை - இதனைக் கண்ணுற்ற அந்தப் பெண் கூச்சலிடவே அங்கு கூடிய பொது மக்கள் குறிப்பிட்ட திருடனை மடக்கிப்பிடித்து நையப்புடைத்தனர்.

இதேவேளை - கடந்த வியாழக்கிழமை அரியாலைப் பகுதியிலுள்ள பலசரக்குக் கடையும் திருடர்களால் உடைக்கப்பட்டு 45 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (55)


## சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 31/4 பரப்புடைய காணி வீடு விற்பனைக்கு உண்டு. மேலதிக தொடர்புகளுக்கு: 0777 145282 (C/3022)









**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான

இந்தியன் புரூஸ்லி தனுஷ், தியா நடித்த

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30, 9.00 (பு.நே) (சி-3319)






**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ரவி கிருஷ்ணா, சோனியா அகவர்வால் நடித்த

**7/G றெயின்போ காலனி**

**கேம்பஸ்** (ரீல்ஸ்)

விசேட காட்சி: இரவு 9.00 மணிக்கு (பு.நே)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே) (சி-2723)


# கிளிநொச்சி மாவட்டத்தில்

**தமிழ் மாணவர் ஒன்றியம் - கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின்**

## இணைந்த ஆதரவுடன்

**நமது ஈழநாடு**

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

# நடாத்தும்

**க.பொ.த (சா/த) – 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை ( பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்) கிளிநொச்சி மாவட்டத்தில் இலவசமாக நடாத்தவுள்ளது.**

**பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்**

## கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12,13,14.11.2004 (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்)

| | | |
|---|---|---|
| 01. | பூநகரி | பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | முழங்காவில் | முழங்காவில் மகாவித்தியாலயம் |
| 03. | ஜெயபுரம் | ஜெயபுரம் அ.த.க. பாடசாலை |
| 04. | பளை | பளை மத்திய கல்லூரி |
| 05. | தருமபுரம் | தருமபுரம் மகா வித்தியாலயம் |
| 06. | முரசுமோட்டை | முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 07. | வட்டக்கச்சி | வட்டக்கச்சி மகாவித்தியாலயம் |
| 08. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் மகா வித்தியாலயம் |
| 09. | அக்கராயன் | அக்கராயன் மகாவித்தியாலயம் |
| 10. | இரணைமடு | கனகாம்ப அ.த.க.பாடசாலை |
| 12. | கனகபுரம் | கனகபுரம் மகா வித்தியாலயம் |
| 12. | உருத்திரபுரம் | கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| 13. | கிளிநொச்சி நகர் | கிளிநொச்சி மகாவித்தியாலயம் |
| 14. | கிளிநொச்சி நகர் | கிளிநொச்சி மத்திய கல்லூரி |
| 15. | விசுவமடு | பிரமந்தனாறு மகா வித்தியாலயம் |

# இந்திய மீனவர்களை மீட்கக்கோரி பிரதமருக்கு ஜெயலலிதா கடிதம்

**இலங்கை கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்கள் 12 பேரை உடனடியாக மீட்கவேண்டும் எனக் கோரி, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.**

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

சர்வதேச கடல் எல்லையைக் கடந்ததாகக் கூறி, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் பிடித்துச் செல்லப்பட்ட சம்பவங்களையும், அவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களையும் நான் பலமுறை தங்களுடைய கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

கடந்த 9 ஆம் திகதி கடலில் வைத்து ராமேஸ்வரம் மீனவர்கள் 12 பேரையும், அவர்களுடைய மூன்று படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

கச்சதீவைச் சுற்றியுள்ள கடற்பகுதியில் மீன்பிடிக்கும் உரிமை இந்திய மீனவர்களுக்கு உள்ளது.

அந்த உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். கச்சதீவில் மீனவர்கள் மீன்பிடிப்பதை இலங்கைக் கடற்படையினர் தடுத்து வருகின்றனர்.

சட்டம், ஒழுங்கை அவர்களே கையில் எடுத்துக்கொண்டு, இவ்வாறு செயற்படுகிறார்கள். தமிழக மீனவர்கள் அடிக்கடி இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படுவது தமிழக மீனவர்களிடையே மிகுந்த கவலையை ஏற்படுததியுள்ளது.

எனவே, தாங்கள் தனிப்பட்ட முறையில் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு, தூதரகம் மூலம் 12 மீனவர்களையும், அவர்களுடைய படகுகளையும் மீட்டுவர, இந்தியத் தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்க, வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு வலியுறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

இதேவேளை, வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்குக்கு - முதல்வர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில் 'தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையால் பிடித்துச் செல்லப்படும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதால், இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு நிரந்தர தீர்வை மத்திய அரசு காண வேண்டும்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# நீதி மன்றத்தை அவமதிக்கும் வகையில் திட்டமிட்டே எஸ்.பி. கருத்துக் கூறினார்.

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க வேண்டுமென்றே நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் கருத்துத் தெரிவித்திருப்பதாக சட்டமா அதிபர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றில் சட்டமா அதிபரின் எழுத்து மூலக் கருத்தைச் சமர்ப்பித்த பிரதி சொலிஸிஸ்ரர் ஜெனரல் சி.ஆர். சில்வா அநுராதபுரத்தில் வைத்து கடந்த நவம்பர் மாதம் எஸ்.பி. திஸநாயக்க கூறியதாகக் கருதப்படும் நீதிமன்றத்தின் பெறுமதி இல்லாத் தீர்வுகளைத் தான் மதிக்கத் தேவையில்லை என்ற கருத்து - நீதிமன்றத்தை அவமதித்ததாகவே கருதப்பட்வேண்டும் எனத் தெரிவித்தார்.

# மத்திய அஞ்சலகத்துக்கு புதிய உத்தியோகத்தர்கள்

மத்திய அஞ்சல் நிலையத்தின் வெளிநாட்டுத் தபால்கள் பிரிவுக்கு நேற்று முதல் புதிய உத்தியோகத்தர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக, அஞ்சல் அதிபர் நாயகம் சேனவீர தெரிவித்தார்.

வெளிநாட்டு தபால் பிரிவின் கண்காணிப்புப் பிரிவுக்கே இவ்வாறு புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி அந்தப் பிரிவுக்கு முதலாம் தர உத்தியோகத்தர்கள் நால்வரும், இரண்டாம் தர உத்தியோகத்தர்கள் ஆறு பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் அஞ்சல் திணைக்களத்தின் ஊழியர்கள் ஆவர்.

அண்மையில் இங்கு ஏற்பட்ட வெளிநாட்டுத் தபால் பொதிகளில் ஏற்பட்ட மோசடிச் சம்பவங்களையடுத்தே, இந்தப் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)



சம்பள உயர்வு கோரி வடக்கு - கிழக்கு சுகாதார ஊழியர்கள் கடந்த புதன்கிழமையன்று திருகோணமலையிலுள்ள மாகாண சுகாதார அமைச்சு அலுவலகத்துக்கு முன்பாக நடத்திய மறியல் போராட்டத்தின் காட்சி

# புலிகளை ஒடுக்க நினைக்கும் முயற்சி வெற்றியளிக்காது

## ஹக்கீம் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சதி நடவடிக்கையும் வெற்றியளிக்க மாட்டாதென, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கல்முனை ஹாகிரா கல்லூரியில் நடைபெற்ற நோன்பு இப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.


சர்வதேச சமூகம் -அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பேச வேண்டுமென எதிர்பார்க்கிறது.

ஆனால், ஜனாதிபதியோ ஏதோ ஒரு வழியில் விடுதலைப் புலிகளை ஒடுக்க வேண்டுமெனக் கனவு காண்கிறார். இது சாத்தியப்படாது.

பதவிக்கு வரும் எந்த அரசு மீதும் முஸ்லிம்களுக்கு நம்பிக்கையில்லை.

இது கடந்த கால அனுபவம். இதன் காரணமாகவே சமாதானப் பேச்சுவார்த்தையில் தனித் தரப்பை நாம் வலியுறுத்துகிறோம்.

தற்போதைய அரசாங்கமும், ஜனாதிபதியும் முஸ்லிம் சமூகத்துக்கு சொல்லொண்ணாத் துயரங்களை ஏற்படுத்த முற்படுகிறது.



இதனை முறியடிப்பதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

புனித ரம்ழான் முடிந்தவுடன் அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் எதிரான முஸ்லிம்களின் வெகுஜனப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இடைக்கால நிர்வாக அடிப்படையில் பேச்சு

# ஆலோசனைச் சபையிலிருந்து ஜே.வி.பியினர் விலக முடிவு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாகக் கொண்டு, பேச்சுக்களை ஆரம்பிக்க ஜனாதிபதி சந்திரிகா முயற்சித்தால், உடனேயே அரசிலிருந்து விலகிக்கொள்வதற்கும், அது குறித்து ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கும் - ஜே.வி.பியினரின் அரசியல் சபை தீர்மானித்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த புதனன்று நடைபெற்ற சந்திப்பின்போது இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

ஜே.வி.பி உட்பட, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மக்களிடம் அதிகாரத்தைக் கோரிய போது, இடைக்கால நிர்வாகத்தை முழுவதுமாகவே எதிர்பார்ப்பதாகக் கூறிவிட்டு, தற்போது அதற்கு எதிர்மாறாகச் செயற்பட, அரசு எடுக்கும் முடிவை தமது கட்சி ஒரு போதும் அனுமதிக்காது என ஜே.வி.பியின் மூத்த பேச்சாளர் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகசபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு, பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தீர்மானித்த உடனேயே அரசிலிருந்து விலகிக் கொள்வதற்கான நடவடிக்கையில் ஜே.வி.பி ஈடுபடுவதுடன், அது குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வுப் பிரசார வேலைத் திட்டங்களையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

ஜே.வி.பி கட்சி - மக்களுக்கு முன்னால் ஒன்றையும், மறைமுகமாக வேறொன்றையும் செய்யமாட்டாது எனவும் அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (தே)

### பகிரங்க விவாதத்துக்கு தயார்

# விவசாய அமைச்சரின் சவாலை ஐ.தே.க ஏற்பு

குளங்கள் புனரமைப்பு விவகாரம் தொடர்பாக விவசாய அமைச்சர் அநுர குமார திசநாயக்க விடுத்த பகிரங்க விவாதம் நடத்தும் சவாலை ஏற்றுக் கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஹேமகுமாரநாணயக்கரவே இந்தச் சவாலை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

குளங்கள் புனரமைப்பு விவகாரம் தொடர்பாக பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வருமாறு கடந்தவாரம் விவசாய அமைச்சர் அநுரகுமார திசநாயக்க - ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குச் சவால் விடுத்தார்.

இந்தச் சவாலை ஏற்றுள்ள காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார - ஐக்கிய தேசியக் கட்சி பகிரங்க விவாதத்தில் கலந்துகொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

குளங்கள் புனரமைப்பு, விவசாய அமைச்சின் தற்போதைய செயற்பாடுகள் ஆகியன தொடர்பாக விவாதம் நடத்த ஐந்து நாட்கள்தேவை. ஒரு நாள் போதாது என்றும் அவர் நிபந்தனை விடுத்துள்ளார்.

அத்துடன், இந்த விவாதம் அரசாங்க ஊடகத்தில் இடம்பெறக்கூடாது என்றும், தனியார் ஊடகத்திலேயே நடைபெறவேண்டும் என்றும் அவர் மேலும் நிபந்தனை விதித்துள்ளார்.

### மாவீரர் தினத்தன்று

# படைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிக்கொடி ஏற்றத் தடை

மாவீரர் தினத்தன்று படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு அனுமதி வழங்கமாட்டோம் என இராணுவத் தரப்பினர் தெரிவித்தனர்.

மன்னாரில் இராணுவத்தினருக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மாவீரர் தினத்தன்று படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றும் நிகழ்வை விலக்கிக் கொள்ளுமாறும், பாடசாலை மாணவர்களை இந்த நிகழ்வில் பங்குபற்றச் செய்ய வேண்டாம் எனவும் - இதன் மூலம் இராணுவத்தினருக்கு தடைகளை ஏற்படுத்த வேண்டாம் எனவும் மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திஸ்ஸ தென்னக்கோன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக விடுதலைப் புலிகளுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தினார்.

மாவீரர் தினத்தன்று மன்னார் நகரிலுள்ள விளையாட்டு மைதானம், பஸ் நிலையம் மற்றும் பிரதேசசபை முன்பாகவும் கொடிகளை ஏற்றுவதற்கு, புலிகளால் அனுமதி கோரப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# நாடு பிளவுபடுவதற்கு நாம் இடமளிக்க முடியாது

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது வரவு-செலவு திட்டத்தின் மூலம், நாட்டின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமாதானத்தை ஏற்படுத்தினால் யுத்தத்துக்குச் செலவிடப்படும் பாரிய தொகையை, நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற வீதி புனரமைப்பின் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


கிராமிய வீதிகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நாட்டில் இடம் பெற்ற யுத்தத்துக்காக மிகப பெரிய தொகையை செலவழித்துள்ளோம். யுத்தம் இல்லாமல் இந்த நாட்டில் சமாதானம் நிலவுமாயின், யுத்தத்துக்குச் செலவிடும் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டும்.

இந்த நாடு துண்டுதுண்டாகப் பிளவுபடுவதற்கு நாம் இடமளிக்க முடியாது என்பதை தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சிறிய நாட்டைத் துண்டு துண்டாகப் பிரிப்பதன்மூலம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# இந்திய - பாகிஸ்தான் அணிகள் ஈடன் கார்டனில் இன்று மோதல்





(கொல்கத்தா)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

ஈடன் கார்டன் மைதானத்தில், இந்திய கிரிக்கெட் அணியின் பவள விழாவை முன்னிட்டு நடத்தப்படும் கிரிக்கெட் போட்டி பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்கேற்பதற்காக இன்சமாம் உல் ஹக் தலைமையிலான பாகிஸதான் அணி ஏற்கனவே கொல்கத்தா வந்துள்ளது.

இந்திய அணியும், பாகிஸ்தான் அணியும் கடந்த இரண்டு நாட்களாக கொல்கத்தாவில் ஈடன் கார்டன் மைதானத்தில் வலைப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாகிஸ்தான் அணி முதன்முறையாக இந்திய மண்ணில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டிக்காக கொல்கத்தாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சுமார் 4 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். போட்டி நடைபெறும் ஈடன் கார்டன் மைதானத்துக்குள் தண்ணீர்ப் போத்தல்கள் கொண்டுசெல்லப்படுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. ரசிகர்களுக்குக் குடிநீர் வசதியைப் பொலிஸாரே வழங்கவுள்ளனர். மைதானத்துக்குள் பட்டாசு கொண்டுசெல்பவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெறுவது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

மைதானத்தைப் பார்வையிட்ட இன்சமாம் உல் ஹக் - பகலிரவுப் போட்டிக்கு ஏற்ப தட்ப வெப்பம் காரணமாக இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணிக்குச் சில சிரமங்கள் ஏற்படும். இது இரு அணிக்குமான பிரச்சினை என்று வரும்போது சந்திக்கத்தான்வேண்டும். எனவே நாணயச் சுழற்சியில் வெற்றிபெறுவது முக்கியம்.

ஒரு நாள் போட்டிகளில் இந்தியாவைத் தொடர்ந்து மூன்றுமுறை வென்றிருக்கிறோம். நான்காவது முறையாகவும் வெற்றிகிடைக்கும் என்று நம்புகிறோம். ஆனால், இந்தியாவை வெல்வது சாதாரண விடயமல்ல என்று தெரிவித்தார்.

# சர்வதேச செஸ் தொடர் அபிஜித் முன்னணியில்!

சர்வதேச செஸ் தொடரில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் அபிஜித் குண்டே 3.5 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளார். கொல்கத்தாவில் முன்னணி வீரர்கள் பங்கேற்கும் சர்வதேச செஸ் தொடர் நடைபெறுகிறது.

கடந்த புதன்கிழமை நடந்த நான்காவது சுற்றுப் போட்டியில் இந்தியாவின் அபிஜித் குண்டே, சக நாட்டு வீரரான திபய்ந்து பாருவை எதிர்த்து விளையாடினார்.

இதில் சிறப்பாக விளையாடிய அபிஜித் எளிதாக வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் 3.5 புள்ளிகளுடன் தொடரில் முன்னிலை வகிக்கிறார். மற்றொரு இந்திய வீரரான சூர்யசேகர். கங்கூலி, பங்களாதேஷ் எனாமுல் ஹுசேனிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். ஹுசேன் 3.5 புள்ளிகளுடன் அபிஜித்துடன் முதல் இடத்தை பகிர்ந்துள்ளார்.

# நியூஸிலாந்துடனான போட்டியில் ஷேன் வோன் மீண்டும் இணைவு!

(சிட்னி)

நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணியில் சைமன் கட்டிச் நீக்கப்பட்டுள்ளார். காயம் குணமான நிலையில் மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ளார் சாதனை நாயகன் ஷேன் வோன்.

ஸ்ரீபன் பிளெமிங் தலைமையிலான நியூஸிலாந்து கிரிக்கெட் அணி, இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகொண்ட தொடரில் பங்கேற்பதற்காக அவுஸ்ரேலிய சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. முதல் டெஸ்ட் வரும் 18 ஆம் திகதி பிரிஸ்பன் நகரில் நடைபெறும். இதற்கான 12 பேர் கொண்ட அவுஸ்ரேலிய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இந்திய சுற்றுப் பயணத்தில் சிறப்பாக விளையாடி ஓட்டங்கள் குவித்த கட்டிச் அணியில் இடம்பிடிக்கத் தவறினார்.



சொந்த மண்ணில் போட்டி நடப்பதால் இவருக்குப் பதிலாக அனுபவ வீரரான டரன் லீமன் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் காயம் காரணமாக லீமன் பங்கேற்கவில்லை. தற்போது முழுமையாகக் குணமடைந்த நிலையில் மீண்டும் அவர் அணியில் இடம்பிடித்துள்ளார். இதேபோல் காயத்தில் இருந்து பூரண குணமடைந்த ஷேன் வோன் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளார்.

இந்திய சுற்றுப்பயணத்தில் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு இரண்டிலும் அசத்திய கிளார்க இந்தத் தொடரிலும் நீடிக்கிறார். தவிர பிரட்லீயும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

லீமன் இடம்பிடித்தது குறித்து அணியின் தலைமை தேர்வாளர் டிரிவர் ஹான்ஸ் கூறுகையில் - இந்தியப் பயணத்தில் கட்டிச், ஹுரிட்ஸ் இருவரும் நன்றாக விளையாடினர். ஆனாலும், கட்டிச்சுக்குப் பதிலாக லீமன் தேர்வுசெய்யப்பட்டதற்குக் காரணம், கடந்த ஒரு ஆண்டாக அவர் சிறப்பாக விளையாடி வருகிறார்.

லீமன் கடைசியாக விளையாடிய 14 டெஸ்ட் போட்டிகளில் 5 சதம் அடித்துள்ளார். மேலும் அனுபவம் அதிகம் உள்ளதால் கட்டிச்சுக்குப் பதிலாக அவர் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இந்த அணியில் இடம்பிடித்துள்ள அனைத்து வீரர்களும் நல்ல நிலையில் உள்ளதால், இந்த முறையும் அவுஸ்ரேலிய அணி கட்டாயம் சாதிக்கும் என நம்புகிறேன். என்றார். இரண்டாவது டெஸ்ட் போட்டி வரும் 26 ஆம் திகதி அடிலெய்டில் நடக்கிறது.

அணியின் விபரம் வருமாறு -

ரிக்கி பொண்டிங் (கப்டன்), அடம் கில்கிறிஸ்ட் (துணை கப்டன்), மத்தியூ ஹைடன், ஜஸ்டின் லாங்கர், டேமியன் மாட்டின், டரன் லீமன், மைக்கல் கிளார்க், ஷேன் வோன், ஜேசன் ஜிலெஸ்பி, மைக்கல் கஸ்பரோவிச், கிளென் மக்ரா மற்றும் பிரட்லீ.

விளையாட்டு


# காலிறுதி ஆட்டம் இன்று ஆரம்பம்!

(வடமராட்சி)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இன்று சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து றோயல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (12)

# கொலைக் குற்றச்சாட்டின் பேரில் காஞ்சி சங்கராச்சாரியார் கைது!





(சென்னை)

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் முகாமையாளராக இருந்த சங்கரராமன் (வயது 52) என்பவர் கடந்த செப்ரெம்பர் மாதம் மூன்றாம் திகதி கோவிலுக்குள் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டமை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் நேற்று தமிழக காவற்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் முகாமையாளரான சங்கரராமன் (வயது 52) கடந்த செப்ரெம்பர் மாதம் கோவிலுக்குள் வைத்து இனந்தெரியாத ஒரு குழுவினரால் வெட்டிக் கொல்லப்பட்டார். இந்தக் குழுவில் ஐவர் உள்ளடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கோவில் முகாமையாளர் சங்கரராமன் கொலைக்கும் காஞ்சி சங்கர மடத்திற்கும் தொடர்பிருந்ததாக தகவல்கள் முன்னர் தெரிவித்தன. கடந்த நான்கு ஆண்டுகளாக காஞ்சி சங்கர மடத்திற்கும், சங்கரராமனுக்கும் முன்பகை இருந்ததாகவும், இதன் காரணமாகவே சங்கரராமன் படுகொலை செய்யப்பட்டார் எனவும் செய்திகள் தெரிவித்தன.

இந்த நிலையில் சங்கரராமனை கொன்ற குழுவினரைப் பிடிப்பதற்கு பொலிஸ் அதிகாரி பிரேம்குமார் தலைமையில் தனிப் பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டது. இவர்கள் நடத்திய விசாரணையில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் சென்னையில் இருந்து சென்ற குழுவினரே கொலையைச் செய்ததாக கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 9 ஆத் திகதி இருவர் பிடிபட்டனர். இவர்களின் வாக்குமூலத்தின்படி சங்கரராமனைக் கொலைசெய்யச் சொன்னது காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தான் எனத் தெரிவித்தனர்.

அத்துடன் பொலிஸாருக்கு கிடைத்த பிறிதொரு தகவலால் காஞ்சி இளைய மடாதிபதியான விஜயேந்திர சுவாமிகளின் சகோதரர் ரகுவையும் பொலிஸார் விசாரணைக்குட்படுத்தினர்.

இவர்கள் அனைவரும் அளித்த வாக்குமூலத்தில் சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திர சுவாமிகள் முக்கிய சூத்திரதாரி என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து இவரைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். ஆனால், ஜெயேந்திரர் ஹைதராபாத் அருகே உள்ள மெகபூப் நகரில் தங்கியிருப்பது தெரிய வந்தது.

இதன்படி தமிழக சிறப்பு பொலிஸ் பிரிவு மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் இரவு ஹைதராபாத் சென்று பத்து மணியளவில் ஜெயேந்திரரைக் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஜெயேந்திரரை ஹைதராபாத் விமான நிலையத்துக்குப் பொலிஸார் அழைத்துச் சென்றனர். அங்கிருந்து தமிழக அரசுக்குச் சொந்தமான தனி விமானத்தில் சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் விமானம் சென்னை விமான நிலையத்தில் தரையிறங்கியது. இதன் பின்னர் அங்கிருந்து மூன்று மணியளவில் ஜெயேந்திரர் காஞ்சிபுரம் அழைத்துச் செல்லப்பட்டு பெண் பொலிஸாரின் முகாமில் தனி அறையில் அடைக்கப்பட்டார்.

இதன் பின்னர் காலை 6.30 மணியளவில் காஞ்சிபுரத்திலுள்ள நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சுமார் 30 நிமிடநேர விசாரணை இடம்பெற்றது. இவ்வேளை, தனக்கு உடல்நிலை சரியில்லை எனவும், தன்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற அனுமதிக்கவேண்டுமென ஜெயேந்திரர் கேட்டுக்கொண்ட போதும் நீதிபதி அதனை நிராகரித்தார். பின்னர் அவர் வேலூர் சிறைச்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு அடைக்கப்பட்டார்.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஜெயேந்திரரை வீட்டுக் காவலில் வைக்குமாறு கோரி சென்னை நீதிமன்றில் பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டது.


குறித்த மனு மீதான விசாரணை நேற்றுமாலை நீதிவான் பால சுப்பிரமணியம் முன்னிலையில் இடம் பெற்றது. அவ்வேளை ஜெயேந்திரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, ஜெயேந்திரரின் உடல்நிலை மற்றும் பூசைசெய்வது போன்ற காரணங்களால் அவரைச் சிறையில் வைக்காது வீட்டுக்காவலில் வைக்குமாறு கேட்டார்.

ஆனால், இதனை அரச சட்டத்தரணி எதிர்த்ததை அடுத்து ஜெயேந்திரரை வீட்டுக் காவலில் வைக்க நீதிவான் மறுத்துவிட்டார். இந்தப் பிணை மனு மீது இன்னும் விசாரணை இடம்பெறவுள்ளது.

கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெயேந்திரர் மீது கொலை, கொலைக்குத் தூண்டுதல் உட்பட மூன்று பிரிவுகளில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரியான பிரேம்குமார் தெரிவித்தார்.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெயேந்திரர் உணவு உட்கொள்ள மறுத்துவிட்டார். அதிகாரிகள் இவருக்கு மதிய உணவிற்காகப் பால், பழங்களை வழங்கிய போதும் அதனை அவர் ஏற்க மறுத்துவிட்டார்.

ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்டமைக்கு விஸ்வ ஹிந்து பரிஷத் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதுடன், இந்தக் கைதுக்கு எதிராக ஆந்திர, தமிழக அரசுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளது.




கொல்லப்பட்ட சங்கரராமன்


இவரது கைது குறித்து கருத்துத் தெரிவித்த கருணாநிதி -

தமிழக காவல்துறையினரைப் பாராட்டியதுடன், மக்கள் ஏமாற்றுக் காரர்களை அடையாளம் தெரிந்து கொள்ளவேண்டும் எனவும், உயர் பதவிகளில் இருக்கும் ஜனாதிபதி போன்றவர்கள் மதத் தலைவர்களுடன் இணைந்து அடையாளம் காட்டிக்கொள்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும், இது தொடர்பான விசாரணை நியாயமாக நடத்தப்படும் என தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

# கல்வியின் முக்கியத்துவம்




# கெட்டிக்கார மீன்




1 மீனுக்குப் போட்ட தூண்டிலில் பூச்சி அகப்பட்டுக் கொண்டது. அதனைக் கண்ட மீனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

2 அருகில் இருந்த சிப்பியை எடுத்தது. பூச்சியை சிப்பிக்குள் பிடித்தது.

3 தனது மீன்குஞ்சுகளுக்கு உணவாகக் கொடுத்தது. இப்படிப்பட்ட மீனை எப்படிப் பிடிப்பது? நீங்களே சொல்லுங்கள்?

இங்கே மடிக்கவும்








### என் அன்புக்குரிய சிறுவர்களுக்கு

உங்களுடன் சில மாதங்களாகக் கடிதம் மூலம் கதைத்துக் கொண்டிருக்கிறேன். இந்த முறை 'கதைத்தல்' என்பதைப் பற்றிக் கதைக்கப் போகின்றேன்.

நாங்கள் கதைப்பதை மற்றவர்கள் விரும்பிக்கேட்க வேண்டும். இவர்கள் தொடர்ந்து கதைக்க மாட்டார்களா என்று நினைக்கும்படி பேச்சு இனிமையாக இருக்க வேண்டும்.

சிலர் தொடர்ந்து தேவையில்லாமல் கதைத்துக் கொண்டிருப்பார்கள். வேறு சிலர் கதைக்கவே மாட்டார்கள். அவ்வாறு இருக்கக்கூடாது. அளவுடனும் தேவையுடனும் கதைக்க வேண்டும்.

மற்றவர்களைக் கேலி பண்ணி , புண்படுத்தும் முறையில் கதைக்கக் கூடாது. நாங்கள் தொடர்ந்து அவ்வாறு கதைத்தால், அவர்கள் எங்களுடன் கதைப்பதை நிறுத்தி விடுவார்கள். இன்னொருவரைப் பற்றித் தேவையில்லாமலும் கதைக்கக் கூடாது.

இனிமையான பேச்சு நிறைய நண்பர்களை உங்களுக்குப் பெற்றுத் தரும்.

எனவே இனிமையாகவும் நல்லவார்த்தைகளையும் தேர்ந்தெடுத்துக் கதையுங்கள். கடந்த வியாழக்கிழமை தீபாவளியைக் கொண்டாடி இருப்பீர்கள். அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்.

-பாசமுடன் சாரு அக்கா.

## உள்ளதும் இல்லாததும்

நீரில்லாமல் மீனில்லை
மீனில்லாமல் நீருண்டு
பூவில்லாமல் தேனில்லை
தேனில்லாமல் பூவுண்டு
வானில்லாமல் ஊரில்லை
ஊரில்லாமல் பூவுண்டு
வானில்லாமல் ஊரில்லை
ஊரில்லாமல் வானுண்டு

தீனில்லாமல் நாமில்லை
நாவில்லாமல் தீனுண்டு!
இறையில்லாமல் உலகில்லை
உலகில்லாமல் இறையுண்டு



ஆக்கம் : ச.அர்ச்சனா.
தரம் 8A,
யா/இணுவில் மத்திய கல்லூரி.

# அதிசயம் = ஆனால் உண்மை

## திறமையான நாய்



ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னியில் ஒரு நாய் மிகக் கெட்டிக்காரத்தனமகத் தண்ணீரில் வழுக்கிக் கொண்டு போகும் விளை யாட்டில் திறமை பெற்றுள்ளது. தண்ணீரில் விளையாட விசேடமாகத் தயாரிக்கப்பட்ட குறுகலான நீண்ட பலகையில் சாமர்த்திய மாக கீழே விழாமல் சமாளிக்கிறது.

முன்னே செல்லும் படகுடன் கட்டப்பட்ட கயிறை வாயில் கவ்விக்கொள்ளுகிறது. மிக விரைவாகத் தண்ணீரில் வழுக்கிச் செல்கிறது. உலக உயரம் தாண்டும் போட்டியில் 3.43 மீற்றர் தாண்டி மற்றொரு நாய் சாதனை செய்திருக்கிறது. மனிதனின் சாதனையைவிட 1 மீற்றர் உயரம் அதிகமாகத் தாண்டியுள்ளது.

## பிராணிகளின் உடலில் கிரிக்கும் சக்தி

மற்ற எல்லா விடயங்களும் சமமாக இருக்கும் போது ஒரு பெரிய மிருகத்தைவிட ஒரு சிறிய பிராணிக்கு வேகமாக ஜீரணிக்கப் பட்ட உணவு சக்தியாக மாறிக் கிரகிக் கப்பட வேண்டும். அதனுடைய வேக மாக வீணாகும் சக்தியை ஈடுசெய்யவே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிராணியின் உடல் அளவோடு அதன் சக்தியைக் கிரகிக்கும் உடல்கூறு அமைப்புகளும் தொடர்புள்ளவை.

ஸ்ரு என்ற சுண்டெலி போன்ற பிராணியும் ரீங்காரம் செய்யும் கம்மிங் பறவையும் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சில மணி நேரங்களிலேயே அவை இறந்துவிடும். ஆனால் பெரிய மிருங்கங்ளோ நீண்ட நாட்கள் பட்டினியுடன் இருக்கும்.

## விடுகதைகளும் விடைகளும்

தலையில் வளரும் கை
– சிகை
ஆதி மனிதன் வசித்த கை
– குகை
எதிரியிடம் வளர்க்கும் கை
– பகை
வீரர்கள் சூடும் கை
– வாகை



ஸ்ரீ.சுபஜன்
தரம் 6$^{c}$
யாழ்ப்பாணக் கல்லூரி.

## பழமொழிகள்

கையிலே உண்டானால் காத்திருப்போர் ஆயிரம் பேர்.
காற்றைக் கண்டால் பாயை அகலக் கட்டு
ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி.
அதன் பின் நீயாரோ நான் யாரோ.
தையும் மாசியும் வையகத் துறங்கு
பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை.

லோ. தேனுஷா
தரம் - 5
மாணிக்கவாசகர்
வித்தியாலயம்




## வினோத உயிரினங்கள்

அதிக நீர் அருந்தும் பறவை - புறா
சத்தமிடாத விலங்கு - ஒட்டகச்சிவிங்கி
மிகச்சிறிய முட்டையிடும் பறவை - தேன்சிட்டு
ஞாபகசக்தி கூடிய விலங்கு - யானை
மிகப்பெரிய வாயுள்ள விலங்கு - நீர்யானை

ச. சக்தினாதினி
தரம் - 07
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

## ஓவியம் வரைந்து பழகுவோம்

என்னால் பென்சிலைப் பிடித்து ஒரு நேர்கோடு வரைய முடியவில்லையே என்று யோசிக்கி றீர்களா? தாள் ஒன்றில் தரப்படும் வடிவங் களை வரைந்து பழ குங்கள். ஆர்வமும், தொடர்ச்சியான பயிற்சியின் மூலமும் ஓவியராகி விடுவீர்கள். ஆரம்பத்தில் வட்டம், நீள்வட்டம், சதுரம், செவ்வகம், முக்கோணம் போன்றவற்றை அடிக்கடி வரைந்து பழகிக் கொள் ளுங்கள்.



படம் 1 படம் 2 படம் 3 படம் 4





# இன்ஸ்பெக்டர் இளையதம்பி துப்பறியும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

# தொலைந்த வைரம்




## விசாரணை தொடங்கியது

கடையிலிருந்து வைரம் எப்போது காணாமல் போனது என்பதை எனக்கு விபரமாகச் சொல்லுங்கள் என்று முத்துவேலுழவைப் பார்த்துக் கேட்டார் இளையதம்பி. குரலைக் கனைத்துச் சரி செய்து கொண்டே இளையதம்பியின் கேள்விக்குப் பதில் சொல்லத் தொடங்கினார் முத்துவேலு.

தினமும் விடிய எட்டு மணிக்குக் கடையைத் திறந்ததும் முதல் நாளைய வியாபாரக் கணக்குகளையும், காட்சி அலுமாரிகளில் இருக்கும் நகைகளையும் சரி பார்த்து விட்டுத்தான் வியாபாரத்தைத் தொடங்குவது எனது வழக்கம். வழமை போலவே இன்றைக்கும் காலையில் நகைகளைச் சரி பார்த்தேன். அப்போது வைரப் பெட்டியில் பத்து வைரங்களும் சரியாக இருந்ததை எனது கண்களால் பார்த்தேன். சரி பார்த்துவிட்டு மீண்டும் வைரப் பெட்டியை எடுத்து காட்சி அலுமாரியினுள்ளே வைத்துப் பூட்டினேன்.

சுமார் ஒன்பது மணியளவில் நகை வாங்க வந்த வாடிக்கையாளர் ஒருவருக்குக் காட்டுவதற்காக வைரப் பெட்டியை எடுத்துத் திறந்த போது அதில் ஒன்பது வைரங் கள் மட்டுமே இருந்ததைக் கண்டேன். ஒரு மணி நேரத்துக்கு முன்னர் எனது கையாலேயே எண்ணி நானே காட்சி அலுமாரிக்குள் எடுத்து வைத்துப் பூட்டிய வைரப்பெட்டியிலிருந்து வைரம் ஒன்று காணாமல் போய்விட்டது. மிகவும் விந்தையாக இருக்கிறதல்லவா இளையதம்பி என்று சொல்லி வேதனையோடு சிரித்தார் முத்துவேலு.



காட்சி அலுமாரியின் திறப்பு வழக்கமாகயாரிடம் இருக்கும்? இளையதம்பியின் இரண்டாவது கேள்வி இது.

திறப்பு எப்போதுமே என்னிடம்தானிருக்கும். கடைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு நகைகளை எடுத்துக் காட்ட வேண்டிய சந்தர்ப்பங்களில் வேலையாளட்களிடம் இருக்கும் என்று சொன்னார் முத்துவேலு.

முத்துவேலு சொல்லியதையெல்லாம் கவனமாகக் கேட்ட இளையதம்பி, கண்களை மூடிக்கொண்டு கடுமையாக யோசித்தார். அவரது யோசனையைக் குழப்பிய முத்துவேலு இளைய தம்பியை கூட்டிக் கொண்டு கடையின் வெளிவாசலுக்கு வந்தார்.

## வேலையாட்கள் மேல் சந்தேகம் வேண்டாம்


இளையதம்பியைக் கூட்டிக் கொண்டு கடைவாசலுக்கு வந்த முத்துவேலு அவரைப் பார்த்து இரகசியமான குர லில், இளையதம்பி நான் சொல்லுகிறேன் என்று தவறாக யோசிக்காதீர்கள். எனது கடையில் வேலை செய் பவர்கள் அனை வருமே நல்லவர்கள். எனது தந்தையாரது காலத் திலிருந்தே இந்த நகைக்கடையில் வேலை செய்பவர்கள் அவர்கள் மீது சந்தேகப்படுவது வீணானது என்றே எனக் குத் தோன்றுகிறது. அத் துடன் அவர்கள் தாமாகவே முன்வந்து ஒருவரை ஒருவர் அக்குவேறு ஆணிவேறாகச் சோதனை யிட்டும் பார்த்து விட்டார்கள். சாப்பாட்டுப் பெட்டிகளைக் கூட விடவில்லை என்றால் பாருங்களேன் என்று பெருமை பொங்கச் சொன்னார்.




சரி மிஸ்டர் முத்துவேலு கவலைப்படாதீர்கள். நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இந்த வழக்கில் உங்கள் வேலையாட்கள் மீது சந்தேகப்படுவது வீணா னது என்றே எனக்கும் தோன்றுகிறது. அதை விட்டுவிட்டு வேறு கோணத்தில் இருந்து கொண்டு தான் விசாரணை யைத் தொடரவேண்டும் என்று சொல்லி முத்துவேலுவின் முதுகில் மெதுவாகத் தட்டினார் இளையதம்பி.

(தொடரும்)

நாயிடமிருந்தும் வேட்டைக்காரனிடமிருந்தும் தப்புவதற்கு நரி எந்தப் பாதையால் ஓட வேண்டும்?



## என்ன கதைத்துக் கொள்வார்கள்?



முன்னொரு காலத்தில் ஆமைக்கும் முயலுக்குமி டையே ஓட்டப்போட்டி நடை பெற்றது. அந்த ஓட்டப் போட்டி யில் ஆமை வென்ற கதை உங்களுக்குத் தெரியும். அன்று போட்டியில் பங்குபற்றிய ஆமை, முயலின் பேரன்மார் களான பேரன் முயலும் பேரன் ஆமை யும் இன்று சந்திக்கிறார்கள். அவர்கள் என்ன கதைத்துக் கொள்வார்கள்?

எழுதி அனுப்புங்கள்.

## சொல் விளையாட்டு

குமரனுக்கு உதவுங்கள்

1. எந்த மிருகம் எந்த ஒலியை எழுப்பும்?

| | | |
|---|---|---|
| பசு | - | கீச்சிடும் |
| புலி | - | முக்காரம் போடும் |
| ஆடு | - | கத்தும் |
| அணில் | - | கதறும் |
| எருது | - | உறுமும் |

2. எந்தச் சொல் எந்தக் கூட்டத்தைக் குறிக்கும்?

| | | |
|---|---|---|
| அறிஞர் | - | குவியல் |
| நெல் | - | கற்றை |
| ஒளி | - | அவை |
| பனை | - | கற்றை |
| புல் | - | காடு/தோப்பு |

## மூளைக்கு வேலை

1. வீட்டிலிருந்து இரண்டு கழுதைகள் கோதுமை மூட்டைகளைச் சுமந்து கொண்டு கடைத்தெருவுக்குப் போயின. வழியில் தம்பிக் கழுதையால் சுமையைத் தூக்க முடியவில்லை. அது தவித்தது. அதனால் அதனிடமிருந்து ஒரு மூட்டையை வாங்கிக் கொண்டது அண்ணன் கழுதை. இப்போது அண்ணன் கழுதையின் பாரம், தம்பிக் கழுதை யின் பாரத்தைவிட இரண்டு மடங்காகிவிட்டது. அப்படி யெனில், அண்ணன் கழுதை வீட்டிலிருந்து சுமந்து வந்த மூட்டைகள் எத்தனை?

2. நான்காம் வட்டத்தின் கடைசிப் பகுதியில் என்ன எண் வரும்?

| | | | |
|---|---|---|---|
| 14 / 8, 7 | 24 / 15, 10 | 34 / 17, 18 | 44 / 20, ? |

மூளைக்கு வேலை சென்ற வார விடைகள்
1. 8
2. 6 இரு மடங்காகிய பின்னர் ஒன்று கழிக்கப்பட்டது.

### எந்தக் கைக்குரியது எழுதுகோல்?






## காலத்தின் அருமை

உலகில் சிலர் கல்வி அறிவுள்ளவராயும் - சிலர் கல்வி அறிவற்றவராயும், சிலர் பலசாலிகளாகவும் - சிலர் பலவீனராக வும், சிலர் பணக்காரராகவும் - சிலர் ஏழைகளாகவும் இருக்கின் றனர். இவற்றிக்கெல்லாம் காரணம் காலத்தின் அருமை பெருமைகளை அறிந்து அதனை சரியான முறையில் பயன் படுத்திக் கொண்டமையும் பயன்படுத்திக்கொள்ளாமையுமே ஆகும். ஆனால் சிலர் இவற்றுக்கெல்லாம் ஊழ்தான் காரணம் என்று மேம்போக் காகக் கூறிவிடுவர். ஊன்றி நோக்கின் அவ் வாறு கூறுவது தவறு என்பது அவர்களுக்குத் தெரியவரும்.

வள்ளுவர் கூறுகின்றார்.

"ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்
கருதியிடத்தாற் செயின்" - என்று.

அதனால் அவரவர் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணம் அவர்கள் காலத்தின் அருமை அறிந்தும் அறியாமலும் இருத்தலே ஆகும்.

காலத்தின் அருமை தெரிந்து அதனைப் போற்றுபவர்கள் கற்றவர் என்றும் அறிஞர் என்றும் கருதப்படுகின்றார்கள். இவர்கள் தனக்கும் பிறருக்கும் நன்மை தேடுபவர்களாகவும், பொருளைத் தேடுவதற்குரிய மார்க்கத்தைத் தெரிந்தவர்களா கவும், எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவர்களாகவும், எந்த வேலை யையும் செய்வதற்கு பின்னிற்காதவர்களாகவும் இருப்பார் கள்.

எந்தப் பொருளை அழித்தாலும் மீண்டும் அதைப் பெற்றுக் கொள்ளலாம். வீணாகக் கழித்த காலத்தை மறுபடி யும் அடைய முடியாது. காலத்தின் அருமையை அறி யாது சோம்பி இருப்பவனிடம் அறிவு பெருகாது. அவர் களால் ஒரு காரியத்தை செய்து முடிக்க இயலாது. அதனை முடிக்க நேரம் இல்லையே என்று வருந்துவார்கள்.

இவ்வாறு காலத்தின் அருமையை அறிவதால் ஏற்படும் நன்மைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

பெ. சோபநிதி

## விளையாட்டு



ஆடு கருவிகள் அதிக விதிமுறை கள் இல்லாத எளிமையான விளை யாட்டு என்று ஓடித்தொடுத்தல் விளையாட்டைச் சொல்லலாம்.

ஒருவர் துரத்திக் கொண்டு தொடர மற்றவர்களெல்லாம் அவரிடம் பிடிபடாமல் ஓட வேண்டும். துரத்தி வருபவர் யாரைத் தொடுகிறாரோ, அவர் அடுத்ததாகத் துரத்த வேண்டும். இந்த முறையில் தொடர்ந்து விளையாடலாம்.

இந்த விளையாட்டை தனித் தனியாகவோ அல்லது குழுக்க ளாகவோ விளையாடலாம்.

## நாம் வாழும் உலகம்



பதினாறாம் நூற்றாண் டின் இடைப்பகுதியில் வாழ்ந்த போலந்து நாட்டு விஞ்ஞா னியான நிக்கலஸ் கோப் பேனிக்கஸ் (1473-1543) என்பவர் பூமி அண்டத்தின் மத்தியில் இல்லை. சூரியனை மையமாகக் கொண்டே, எல்லாக் கிரகங்களும் இயங்கு கின்றன என்று கூறினார். எனினும் அக்கால மக் கள் இவர் கூற்றை எள்ளளவும் நம்பவில்லை.

பின்பு இத்தாலி நாட்டில் பிறந்த கலிலியோ கலிலி (1564-1642) என்ற விஞ்ஞானி இவர் முடிவை ஏற்றுக் கொண்டார். மேலும் பல ஆராய்ச்சிகள் நடத்தி வியப்பூட்டும் பல உண்மைகளைக் கண்டறிந் தார். இவரே முதலில் தொலைநோக்கியையும் கண்டு பிடித்தார். இந்த தொலை நோக்கி மூலம், பூமி மையக் கொள்கை யைப் பல ஆதாரங்க டன் இல்லை என நிரூ பித்தார்.



இதன் பின்னர் டைகோ பிராஹே கெப்ளர் போன்ற விஞ் ஞானிகள் மேலும்பல ஆரா ய்ச்சிகள் செய்தனர். சூரி யனைப் பூமி சுற்றிவரும் பாதை இதுவரை எண் ணியிருந்ததுபோல வட்டவடிவமானதல்ல என்றும் அது ஒரு நீள்வட்ட வடிவமானதென்றும் கூறினர். இந்த நீள் வட்டத்தின் குவியங்களில் ஒன்றி லேயே சூரியன் இருக்கின்றதென்றும் கூறினார். இது போலவே ஏனைய கிரகங்களின் பாதைகளும் நீள் வட்ட வடிவமானவையென்றும் கண்டார்.

# எங்கும் வசிக்கும் லேடிபேர்ட்

உலகம் முழுவதும் அதிகமான மக்களால் விரும்பப்படும் வண்டுகளில் லேடிபேர்ட் முதல் இடத்தில் இருக்கிறது. கண்கவரும் பிரகாசமான வண்ணங்களில் காணப்படுகிறது. சிவப்பு மஞ்சள் மற்றும் ஒரேஞ்சு வண்ணங்களில் காணப்படுகிறது. உடலின் மேற்புறத்தில் கறுப்பு வண்ணப் புள்ளிகள் இருக்கும்.




இதற்கு ஆறுகால்களும் இரண்டு உணர்கொம்புகளும் உண்டு. பறவைகள் தான் இதன் முக்கிய எதிரி. அவற்றைப் பார்த்து விட்டால் இறந்து விட்டதைப் போல் நடித்து தப்பி விடும்.



செடி, கொடிகளை அரிக்கும் சின்னஞ்சிறு பூச்சிகள் தான் இதன் முக்கிய உணவு. அதனால் தோட்டக் காரர்களுக்கு சிறந்த நண்பனாக விளங்குகிறது.

உலகம் முழுவதும் தோட்டங்கள், காடுகள், மலைகள், சமவெளிகள் என எல்லா இடங்களிலும் வாழ்ந்து வருகின்றன. இது மட்டுமன்றி விண்வெளிக்குச் சென்று திரும்பிய பெருமையும் லேடி பேர்ட்டிற்கு இருக்கிறது.

## எந்தப் பறவைக் குஞ்சின் அம்மா மோசமான குணமுள்ளது?



நாங்கள் இந்தப் பறவையைக் குயில் என்று குறிப்பிடுவோம். இது மிகவும் சோம்பேறியான பறவை. தனக் கென்று கூடுகட்டாமல் வேறு பறவைகளின் கூட்டுக்குள் குயில் தன்னுடைய முட்டைகளை இடும். பின்னர் எங்காவது போய் ஒன்றுமே தெரியாதது போல் இருக்கும்.

இதன் முட்டைகள் குஞ்சு பொரித்தாலும் அதைக் குயில் பார்ப்பதேயில்லை. குயில் குஞ்சுகள் மிகவும் கஷ்டத்துடன் தான் இன்னொரு கூட்டிற்குள் தங்களுடைய காலத்தைக் கழிக்கும். சில வேளைகளில் குயில் குஞ்சுகளைக் கூட்டுக்குள் உள்ள ஏனைய குருவிக் குஞ்சுகள் கொத்திக் கலைப்பதும் உண்டு.

# கிரேட்டேன்

அழகுடனும், கம்பீரத்துடனும் காணப்படும் இந்த நாய் 'கிரேட்டேன்' என்று அழைக்கப்படுகிறது.

பல நூற்றாண்டுகளாகக் காட்டு மிருகங்களை வேட்டையாட இந்த நாய் பயன்பட்டு வருகின்றது. இதற்கு இருக்க நல்ல இடமும், நல்ல உணவும், சிறந்த உடற் பயிற்சியும் கிடைத்தால் மிகவும் சாதுவாகவும், அன்புடனும் இருக்கும்.

கிராமப்புற வீடுகளையும் பெரிய தோட்டங்களையும் காவல் காக்கச் சிறந்தது. கிரேட்டேன் தன்னை வளர்ப்பவர்கள் தன்னிடம் அன்பாக இருப்பதை விரும்பும்.



இது பிறரை அவசியமின்றி எதிர்க்கும் குணம் கொண்டது அல்ல. இந்த நாயின் படத்தைப் பார்த்தால் மிகுந்த பாவமும் முரட்டுத் தனமும் கொண்டதாகத் தோன்றுகிறது. இல்லையா? ஆனால் இது சிறிய குழந்தைகளிடம் மிகுந்த அன்பும் பாசமும் உடையது!

இங்கே மடிக்கவும்



# அண்ணனும் தங்கையும்

## கழுகின் பார்வை கூர்மையாக இருப்பதேன்?

பாடசாலை முடிந்து வீடு வந்தாள் குழலி. வீட்டின் பின் வளவிலிருந்து கோழி கொக்கரிக்கும் சத்தம் கேட்டது. பின் வளவிற்குள் குழலி ஓடிப் போனாள். கோழிக் குஞ்சுகள் கீச்சுக் கீச் சென்று கத்திக் கொண்டு அங்கும் இங்கும் ஓடியவாறு இருந்தன.

தாய்க்கோழி மாமரத்தில் எதையோ பார்த்து சிறகுகளைக் கோபத்துடன் விரித்து கொக்கரித்துக் கொண்டிருந்தது. குழலிகல் ஒன்றை எடுத்து மாமரத்தை நோக்கி வீசினாள். மரத்தில் இருந்து கழுகு பறந்தது. குழலிக்கு ஆச்சரியம். அண்ணாவிடம் ஓடிப் போனாள்.



**குழலி :** அண்ணா! அண்ணா! இப்படி

**சங்கர் :** என்ன குழலி? ஏன் ஓடி வருகிறாய்?

**குழலி :** கோழிக்குஞ்சு பிடிக்க கழுகு வந்திருந்தது. நான் கலைத்து விட்டேன். எப்படி இந்தச் சிறிய கோழிக் குஞ்சுகளை வானத்தில் உயரமாகப் பறக்கின்ற கழுகுக்குத் தெரிந்தது?

**சங்கர் :** குழலி! பொதுவாக பறவைகளுக்கு கண்பார்வை மிகத் துல்லியமானது. இந்தப் பண்பு பறவைகள் பறப்பதற்கு உண்டான தகவமைப்பாகும்.

**குழலி :** பறவைகளின் பறப்பதற்கு உண்டான தகவமைப்புப் பற்றி விளக்கமாகச் சொல்லுங்கள் அண்ணா.

**சங்கர் :** சரி சொல்கிறேன். எங்களுடைய கண்ணில் காணப்படாத ஒரு உறுப்பு பறவையின் கண்களில் இருக்கிறது. சீப்பு வடிவத்திலுள்ள இதற்கு 'பெக்டின்' என்று பெயர். இது பார்வை நரம்பு புறப்படும் இடத்தில் அமைந்துள்ளது. இதனால் கண்ணின் இசைவுபடுதல் ஆற்றல் அதிகரிக்கிறது. விழிக் கோளத்திற்குள் இருக்கும் திரவ அழுத்தத்தை நிலை நிறுத்திப் பார்வையைக் கூர்மையாக்கிறது.



**குழலி :** எனக்கு விளங்கி விட்டது அண்ணா. கழுகுவெகு உயரத்தில் பறக்கும் தன்மை கொண்ட பறவை. இதற்கு பெக்டின் உறுப்பு நன்றாக வளர்ச்சி பெற்று செயல் திறன் உடையதாக இருக்கிறது. அதனால் தான் கழுகு உயரத்தில் பறந்தும் போது நிலத்தில் கோழிக்குஞ்சு திரிவதைப் பார்க்க முடிகிறது. சரியா அண்ணா?

**சங்கர் :** சரி குழலி. நீ கெட்டிக்காரி. சொன்னவுடன் புரிந்து கொண்டுவிட்டாய்.

# என்றும் வாடாத வேப்பமரம்

வீதியோரத்தில் மிக மிக வயதான வேப்பமரம் நிற்கின்றது. இலையுதிர் காலத்தில் மொட்டையான அதன் கிளைகள் அச்சத்தோடு அசைகின்றன. வசந்த காலத்திலோ பச்சைப் பசேலென இலைகள் அவற்றில் நிறைந்திருக்கின்றன. எனக்கு நினைவிலிருக்கும் வரை இந்த மரம் ஒரு காவலாளியைப் போல் நிற்கின்றது. நான் அம்மாவைக் கேட்டேன்.

''எம்முடைய வேப்ப மரத்துக்கு வயதென்ன? யார் இதை நட்டது?''

தெரியாது. எனக்கு நினைவிலிருக்கும் வரை இது இங்கே நிற்கின்றது என்றாள் அம்மா.

தாத்தாவைக் கேட்டேன்.

''தாத்தா எம்முடைய வேப்ப மரத்துக்கு வயதென்ன? யார் இதை நட்டது?''



நினைவில்லை. இது எப்பவும் இந்த வீதியோரத்தில் நிற்கின்றது என்றார் தாத்தா.

வளருது. எல்லோருக்கும் சந்தோசத்தைத் தருகிறது. யாரோ ஒரு நல்ல மனிதர் இந்த வேப்பமரத்தை நட்டார். நான் சின்னப்பையனாக இருந்தபோது இந்த மரத்துக்கு கீழே விளையாடினேன். உன் அம்மா தன் தோழிகளோடு சிறு மாலைகள் கட்டி விளையாடினாள். இதோ! இப்போது நீ இதன் நிழலில் விளையாடுகிறாய் என்றார் தாத்தா.

## விடுகதைகளும் விடைகளும்

1. அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி வாலினால் நீரை வற்றக் குடிக்குது அது என்ன?
2. ஆடி ஆடி அசைந்து வரும் ஆத்திரம் வந்தால் பொங்கி எழும் அது என்ன?
3. கண் உண்டு. செவி இல்லை. கண்டிடும் கேட்டிடும் அது என்ன?
4. கிட்ட இருக்குது பட்டணம் எட்டிப்பார்க்க முடியவில்லை அது என்ன?
5. கொண்டையிலே பூவுண்டு எடுக்க முடியவில்லை. குதிக்காலில் முள் உண்டு பிடுங்க முடியவில்லை.

விடைகள்

1.விளக்குத்திரி 2.கடல் அலை 3.பாம்பு 4.முதுகு 5.சேவல்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று
திருக்குறள்

## நமது நோக்கு

# சமாதானப்பேச்சும் சந்திரிகாவின் கபடமும்

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திப்பதற்காக வந்த நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சனிடம் ஜனாதிபதி சந்திரிகா புதிய செய்தியொன்றைக்கொடுத்துவிடுவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், சந்திப்பு முடிந்த பின்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களிடம்பேசும்போது –

புதிதாக எந்தச் செய்தியையும் சந்திரிகாவிடமிருந்து பீற்றர்சன் கொண்டுவரவில்லை. நாம்தான் புதிய யோசனையைக் கொடுத்தனுப்பியிருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த நிலைப்பாடு தொடர்ந்தும் சர்ச்சைக்குரியதாக இருப்பதால் தான் பேச்சுக்கள் தொடர்ந்தும் தாமதமடைந்து வருகின்றன.

தேசிய ஆலோசனைச் சபையிலும் – கடந்த புதனன்று பீற்றர்சனை கொழும்பில் சந்திக்கமுன்னர் றொய்ட்டருக்கு வழங்கிய பேட்டியிலும், சமாதானப் பேச்சுகள் தொடர்பான புதிய அணுகு முறையை கடைப்பிடிக்கப்போவதாகவும், பீற்றர்சன் வருகையுடன் நிலைமை மாறும் எனவும் கூறியிருந்தார்.

ஆனாலும், பீற்றர்சனிடமும் அதே பழைய பல்லவியைத் தான் ஜனாதிபதி சந்திரிகா கூறியிருப்பது மட்டுமன்றி – புதிதாக எதையும் புலிகளுக்கு சொல்லியனுப்பாததால் – புலிகள் தரப்பு தாமாக ஒரு யோசனையை அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

இது பற்றிய தகவல் வெளியிடப்படாதபோதும் – இப்போது பந்து மீண்டும் அரசின் பக்கமே அடித்துவிடப்பட்டிருக்கிறது என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இருக்கமுடியாது.

அதேவேளை, ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்தில் மாற்றம் ஏற்படாதவரையில் சமாதான முயற்சிகள் மீளவும் ஆரம்பிக்கப்படுவதில் சிக்கல்கள் நீடிக்கவே செய்யும்.

இடைக்கால தீர்வு தொடர்பான எந்தப்பேச்சுக்களும், இறுதித் தீர்வொன்றை அடிப்படையாகக்கொண்டதாகவே இருக்கும் என்ற சந்திரிகாவின் நிலைப்பாடு – மீண்டும் மீண்டும் தமது வியூகத்துக்குள் புலிகளைக் கொண்டுசென்று வீழ்த்துவதையே அடிப்படையாகக்கொண்டது.

ஜனாதிபதி சந்தரிகாவைப் பொறுத்தவரை புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை கையளிக்கத் தயாராக இல்லை என்பதே உண்மை. இதற்காக ஏதேதோ சாக்குப்போக்குகளையும், பொருந்தாத திட்டங்களையும் முன்வைத்துவருகிறார். றொய்ட்டர் பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா புலிகளுக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரம் வழங்குவது என்பது சாத்தியமே இல்லை என்று கூறியிருப்பது – அவரது இறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருக்கிறது.

இப்படியான நிலையில், இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுக்கள் – இறுதித்தீர்வை அடிப்படையாகக் கொண்டே நடத்தமுடியும் என்று நிபந்தனை விதிப்பது அவரது போலித்தனத்தைக் காட்டுகிறது.

அத்துடன் புலிகள் ,தாம் முன்வைத்த வரைபின் அடிப்படையில் தீர்வைக் கோருவதாகவும் அரசு கூறித் தப்ப எத்தனிக்கிறது. ஆனால், புலிகளோ வரைபை அடிப்படையாக வைத்து பேச்சு நடத்தி முடிவு காணலாம் என்றே கூறிவருகின்றனர்.

இப்படி பேச்சுக்களை தொடங்குவதாகக் கூறி காலத்தைக் கடத்துவதிலேயே ஜனாதிபதி சந்திரிகா உறுதியாக இருக்கிறாரே தவிர சமாதானப் பேச்சுக்களில் அவர் நாட்டம் காட்டவில்லை.

இதைவிட றொய்ட்டர் செய்திநிறுவனத்துக்கு வழங்கிய பேட்டியில் – புலிகளின் தலைவர் பிரபாகரன் தனிநாட்டுக்கோரிக்கையை ஒருபோதும் கைவிடப்போவதில்லை எனவும் தெரிவித்து தனது நிலைப்பாட்டுக்கு ஆதரவு தேடமுற்படுகின்றார்.

இதனால்தான் தாம் இடைக்கால நிர்வாகத்தைக் கொடுக்கவில்லை என்பதே அவரது வாதம்.

புலிகள் தனியரசை அமைப்பது என்ற தமது நிலைப்பாட்டில் இருந்து மாறினார்களோ இல்லையோ என்பதில்லை இப்போதைய பிரச்சினை.

புலிகள் தனியரசை அமைப்பதுதான் முடிவு என்ற நிலையில் இருந்திருப்பார்களானால் –அது சமாதான வழிமுறையில் சாத்தியமாகாது என்பதை அறிவார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனிநாட்டுக்கோரிக்கையை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்று கூறி – சமாதான முயற்சிகளை பிற்போடுவதையே ஜனாதிபதி சந்திரிகா விரும்புகிறார்.

சமாதானப்பேச்சு என்று காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கும். ஜனாதிபதி சந்திரிகா இதுவே சமாதானத்தின் எதிரி எனத் தெரிந்து வைத்திருந்தாலும் அவர் தனது பிடிவாதத்திலிருந்து விலகிக்கொள்ளும்வரை சமாதானப் பேச்சுக்களில் வெற்றி என்பது சாத்தியமாகாது.

## நாடும் நடப்பும்




# தென்னை நாற்றுக்களை இலவசமாக விநியோகிக்க முடிவு

## வனவள சுற்றாடல்துறை அமைச்சு நடவடிக்கை

வனவள சுற்றாடல்துறை அமைச்சு வனவள முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் வட - கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் 71 ஆயிரம் தென்னை நாற்றுக்களை அந்தந்த மாவட்ட அரச அதிபருடாக இலவசமாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 6 ஆயிரம் நாற்றுக்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 8,750 நாற்றுக்களும், வவுனியா மாவட்டத்தில் 3750 நாற்றுக்களும், மன்னார் மாவட்டத்தில் 4750 நாற்றுக்களும், திருகோணமலை மாவட்டத்தில் 6750 நாற்றுக்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 13750 நாற்றுக்களும், அம்பாறை மாவட்டத்துக்கு 23,500 நாற்றுக்களுமாக மொத்தம் 71,000 நாற்றுக்களை அந்த அந்த மாவட்ட அரச அதிபருக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் வழங்குமாறு தென்னைப் பயிர்செய்கைச் சபையிடம் வனவள முகாமைத்துவத் திட்டப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 6000 நாற்றுக்களையும் அரச அதிபர் நாடாளுமன்ற உறுப்பினர்களது சிபார்சுக் கூடாக விநியோகிக்க நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரியவருகிறது.

கடந்தகால யுத்தத்தின் விளைவாக ஏழு இலட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் அழிக்கப்பட்ட வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களுக்குமாக 23,250 தென்னை நாற்றுக்களை இலவசமாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (31)

# மழை வெள்ளம் தேங்குவதால் வீதிப் போக்குவரத்து பாதிப்பு

அரியாலை சாஸ்திரியார் வீதி - மிக நெடுங்காலமாக திருத்தப்படாததால், அந்த வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், அதனூடாகப் போக்குவரத்துச் செய்வோரும், வாகனங்களும் பெரும் விபத்துக்களையும், சிரமங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அத்தோடு, மழைகாலங்களில் பெருமளவு நீர் இந்த வீதியில் தேங்கியுள்ளதால், இந்த வீதியூடான போக்குவரத்து பெருமளவு பாதிப்படைகிறது என்றும், இது குறித்து யாழ். மாநகர சபை கவனம் செலுத்தவேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள கேட்டுள்ளனர்.

# மணல் அகழ்வில் ஈடுபட்டுவந்த கன்ரர் வாகனம் எரியூட்டப்பட்டது

தென்மராட்சி - தச்சன்தோப்பு வேலம்பிராய் கரையோரப் பகுதியில், சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டுவந்த கன்ரர் வாகனம், கரையோர சூழல் பாதுகாப்புக் குழுவினரால் எரியூட்டப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் வேலம்பிராய் கடற்கரையோரம் மணல் ஏற்றிக்கொண்டுவரும் வழியில், வாகனம் மண்ணுக்குள் புதைந்துள்ளது. அந்தநேரம் அங்கு வந்த கரையோர மணல் அகழ்வுக்கு எதிரான சூழல் பாதுகாப்புக் குழு இளைஞர்களைக் கண்டதும், வாகனத்தில் வந்தவர்கள் - வாகனத்தை விட்டுத் தப்பி ஓடினர்.

சட்டவிரோத மண் அகழ்வு மேற்கொள்ளவேண்டாம் என்று பலமுறை இவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டும், மீண்டும் மீண்டும் இவர்கள் மண் அகழ்வில் ஈடுபட்டு வந்ததனால்தான் தாம் இந்த வாகனத்தை எரியூட்டியதாக பாதுகாப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

# புலிகளின் குரல் ஆண்டு நிறைவு கலை இலக்கிய போட்டி முடிவுகள்

புலிகளின் குரலின் 14 ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கலை, இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன்படி நாடகப் போட்டியில் முதலாம் இடம் ‘மீண்டும் கண்பார்வை வேண்டும்’ (வ. ஏழுமலை - கிளிநொச்சி), இரண்டாம் இடம் ‘ஊமையாகிப்போன உண்மைகள்’ (போராளி குயிலினி - தலைமைச் செயலகம்), மூன்றாம் இடம் ‘வானம் தொடும்வரை’ (சி. கலைப்பிரியா - முரசுமோட்டை)

சிறுகதைப் போட்டியில் முதலாம் இடம் ‘நிகழ்காலம்’ (வைகை - யாழ். பல்கலைக்கழகம்) , இரண்டாம் இடம் ‘ஏன் இப்படிச் செய்தீர்கள்’ (போராளி தமிழ்நிலா - முல்லைத்தீவு), மூன்றாம் இடம் தெரிவு (போராளி செ. புரட்சிகா - மாலதி படையணி)

கவிதைப் போட்டியில் முதலாம் இடம் ‘அவனைப் பொழியும வானம்’ (போராளி வி. ஜெயசீலன் - சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி). இரண்டாம் இடம் ‘இடுப்புக்களில் நெருப் பெரிய இனியும் விடோம்’ (க.லிங்கராசா - கிளிநொச்சி). மூன்றாம இடம் ‘பாதுகாப்பு வலயம்’ (போராளி மா.தமிழவன் - நிதித்துறை).

இந்த கலை இலக்கியப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு புலிகளின் குரல் நிறுவன நடுவப் பணியக அமலன் அரங்கில் இடம்பெறவிருக்கும் ‘வானோசை 14’ நிகழ்வின்போது வழங்கப்படும் என புலிகளின் குரல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# வன்செயல்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

இலங்கை மகளிர் பணியகத்தால் - பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்செயல்கள் தொடர்பான் விழிப்புணர்வுக் கருத்தரங்கு, எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் - நல்லூர் பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, உளவளத்துறை ஆலோசகர் எஸ்.சந்திரசேகரசர்மா, மற்றும் சறோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். இந்தக் கருத்தரங்கில் கிராம சேவகர்கள், சமுர்த்தி அலுவலர்கள், கிராமமட்டப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (55)

# தப்பியோடிய சிப்பாய் ஆயுதத்துடன் கைது

இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய சிப்பாய் ஒருவரை ஆயுதங்களுடன், வெல்லம் பிட்டிய பொலிஸார் கைதுசெய்தனர்.


மேலும் ஒருவர் அவருடன் கைது செய்யப்பட்டார். கொட்டாஞ்சேனை புறுமெண்டல் வீதியிலே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

ஒருவரைக் கொலை செய்வதற்கு இவர்கள் திட்டமிட்டு இருந்தாக விசாரணைகளின்போது தெரியவந்தது என பொலிஸார் தெரிவித்தனர்.

பணி உளமேலாண்மை - எஸ்.ஜெயா

# பொதுத்துறைப் பணியாளர்களிடையே மாற்றம் காணவேண்டிய உளப்பாங்குகள்

இன்று பணி அமர்வுகளில் பெரும்பாலானவற்றில் ஊதியமும் அதனுடன் கிடைக்கும் வசதி வாய்ப்புகளையுமே மையப்படுத்தி பணியாளர்கள் உள்நுழைவதனைக் காணமுடிகின்றது. இதனால் பல பணிகளில் அவர்களிடமிருந்து போதிய வினைத்திறனைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதோடு, அவர்களிடம் கடமை, கண்ணியம், கட்டுபாடுகள் என்பவற்றை எதிர்



பார்க்க முடியாதுள்ளது. இதன் விளைவாக, பல பணிகளிலிருந்து பல பணியாளர்கள் தமது சுயநலத்துக்காக இடைவிலகுவதும் வேறு தொழில்கள் தேடி தொழிற்தாவல்களை மேற்கொள்வதும் நடந்து வருகின்றது.

இத்தகைய செயல் நிலையானது தனியார்துறைகளைப் பார்க்கிலும் அரச துறைகளிலேயே அதிகம் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணியாக அமைவது, அரச துறையில் காணப்படும் ஆட்சேர்ப்பு முறைகளில் உள்ள குறைபாடுகளும், அரச பதவிகளால் பணியாளர்களுக்கு கிடைக்கும் சமூக அந்தஸ்துமேயாகும். இதனாலேயே அரச துறை நோக்கி பெருவாரியான தொழில் தேடும் படையினர் தமது முன்னகர்வுகளை மேற்கொள்வதோடு, அரச நியமனங்களில் தொழிற் போட்டியை உருவாக்கி அதிகரித்த நிரம்பலைத் தோற்றுவித்து விடுகின்றனர்.

இவற்றைவிட மாறி மாறி ஆட்சி அமைக்கும் அரசியல் தளங்களும் அவற்றின் கட்சி சார்பான நியமனங்களும், தேவையின் பொருட்டு தமக்குச் சார்பாக நெகிழ்வினைத் தூண்டும் நியமனக்கோட்பாடுகளும் பணியாளர்களை உள்ளீர்ப்பதில் அவர்களின் உளப்பாங்கு தொடர்பான நிலைகளில் பொருத்தமற்ற உள நிலை தோற்றமடைகின்றன.

எமது நாட்டை எடுத்துக் கொண்டால் பணிநிலைக் கேள்வியாளர்கள் பலர் ஆசிரிய நியமனத்தையே விரும்புகின்றனர். இதற்குப் பிரதான காரணமாக அமைவது, ஆசிரியத் தொழிலில் காணப்படும் அதிகரித்த அனுகூலங்களாகும். இதனால் ஆசிரியர் நியமனக் கோட்பாடுகளில் நிலையான அடிப்படைத் தகுதிகள் எதுவும் பின்பற்றப்படாது, எழுந்தமானமான முறைகளை காலத்துக்குக் காலம் பின்பற்றப்படுவதைக் காணமுடிகின்றது.

இங்கு க.பொ.த (சா/த) தரத்தில் இருந்து இளநிலைப்பட்டம் பெற்றோர் வரை ஆசிரியத் தொழிலுக்கு உள்வாங்கப்படுகின்றனர். இவர்கள் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், கல்வியியல் கல்லூரி டிப்ளோமாப் பட்டம் பெற்ற அசிரியர்கள் பல்கலைக்கழக பட்டம் பெற்ற ஆசிரியர்கள் எனப் பல தரத்தினர் உள்ளடங்குகின்றனர். ஆனால் பெரும்பாலான மேலை நாடுகள் முதுநிலைப்பட்டதாரி ஒருவரையே ஆசிரிய முன்பயிற்சி கொடுத்து, அவரது தனிப்பட்ட சமூக பரிமாணங்களை அறிந்தே நியமனம் வழங்குகின்றன.

இதனால் அந்த நாடுகளில் ஆசிரியர்களுக்கு சிறந்த மதிப்பும், மரியாதையும் கிடைக்கின்றன.எமது நாட்டில் அரசியல் ஆதாயங்கள் ஆசிரிய நியமனத்தில் தலை நீட்டியதால், சமூகத்தில் ஒருவர் தகுந்த அல்லது சிறந்த நற்பிரஜையாக காணப்படாது, அவர் ஆசிரியத் தொழிலை ஆற்றுகின்றபோது, அவர் தொடர்பாக மாணவர்களுக்கும் அந்த ஆசிரியர்களுக்குமிடையே உள முரண்பாடுகளைத் தோற்றுவித்து விடுகின்றன.

இவையே காலப்போக்கில் வளர்ச்சி கண்டு ஏனையவர்களிடையேயும் பரந்து, ஆசிரியத்துவத்தை மதிக்காத்தன்மை இன்று எமது சமூகத்தில் இருப்பதைக் காணமுடிகின்றது. இதனால் ஆசிரியத் தொழில் வடிகட்டிப் பெறப்படவேண்டியதொன்றாகியுள்ளது.

இவற்றைவிட, பல ஆசிரியர்கள் தமது பணி அனுகூலத்திற்காக இத்தொழிலினைத் தேர்வு செய்தமையால், அவர்களிடத்திலே அந்த அனுகூலங்களை அனுபவிப்பதில் உள்ள நாட்டமே மேலோங்கி இருப்பதோடு, பணி அனுகூலத்தில் சிறப்பு நாட்டம் குறைவதாலும் முரண்பாடுகள் தோற்றமடைகின்றன.

இதேபோன்று மருத்துவத்துறையை நாம் எடுத்துக் கொண்டால், இதன் தொழில் முரண்பாடு வேறுவிதமாக அமைகின்றன. இந்தத் துறையிலே ஒருவைத்தியருக்கும் நோயாளிக்குமான தொடர்பு மிகச் சுமுகமான முறையிலேயே காணப்படவேண்டும்.

நமது நாட்டில் காணப்படும் குறைவான வைத்தியர்களும், அதிகரித்த நோயாளர்களும், வைத்தியர்களின் தனியார் சிகிச்சை நிலைய நாட்டமும் இவர்களிடையே உளமுரண்பாடுகளைத் தோற்றுவித்து விடுகின்றன.

ஒரு நோயாளி சிகிச்சைக்காக ஒரு வைத்தியரை நாடிச் செல்கின்ற போது, அவரை அன்பாக அரவணைத்தும், பேசியும், இன்முகத்துடனும் வழி அனுப்புகின்றபோது, அந்த நோயாளியின் பாதிநோய் குறைவடைந்த மாதிரி இருக்கும். ஆனால் பல பொது வைத்திய சாலைகளில் நோயாளர்கள் அங்கிருக்கும் ஊழியர்களால் அநாகரிமாக நடாத்தப்படுவதால், அவர்கள் மனமுடைந்து போகின்றனர். சில வைத்தியர்களும் நோயாளிகளைத் தகுந்த முறையில் அணுகுவதில்லை. இது அவர்களின் வேலைப் பளுவால் தோன்றிய உளப்பாங்காகவும் இருக்கலாம்.

இதன் காரணமாக, அந்த நோயாளி அந்த வைத்தியர் மீது வெறுப்படைவதால் அவர் கொடுக்கும் மருந்துகளும் அந்த நோயாளிக்கு வெறுப்பூட்டும் உளப்பாங்கினையே தோற்றுவித்து விடுகின்றது. இந்தச் செயற்பாடு நோய் தீவிரமடையவே வழி வகுத்து விடுகின்றது. மேலும் தாதிச் சேவையானது ஒரு புனிதமான தொழில். ஆகையால் இதைத் தெரிவு செய்து கொள்வோர் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்ற முன்வர வேண்டும்.

ஆனால் பலர் ஊதியத்துக்காக இந்த வேலையைத் தெரிவு செய்து விட்டு, தமது நிம்மதியையும் கெடுத்து நோயாளர்களின் நிம்மதியையும் கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே இத்தகைய உளப்பாங்குகள் மாற்றங்கண்டு இப்படிப்பட்ட தொழில்களைத் தெரிவு செய்ய முன்வருவோர் அந்தத் தொழிலில் தமக்கு ஈர்ப்பு இருந்தாலன்றி, வேறு அனுகூலங்களை மனதில் கொண்டு மட்டும் அந்தத் தொழிலைத் தெரிவு செய்தல் நிறுத்தப்படவேண்டும்.

தனியார் துறையினை எடுத்துக் கொண்டாலும் அங்கும் பல்வேறு பிரச்சினைகள் எழுவதைத் காண முடிகின்றது. அதாவது குறைந்த ஊழியத்தினைக் கொண்டு அதிக வெளியீடுகளை எதிர்பார்ப்பதும் திறமைக்கு ஏற்ப பதவி, ஊதிய உயர்வு வழங்கப்படாமை என்பனவும், நிறுவனங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும், ஊழியர்களை இடைவிலக்கல் செய்வது போன்றவையும் நடைபெறுகின்றன. எனினும் தனிப்பட்ட திறமையும் விவேகமும் கொண்டவர்கள், அந்தத் துறையில் முன்னேற்றம் காண்பதோடு அதிக ஊதியத்தையும் பெற்று தமது வாழ்வினை மேம்படுத்திக் கொள்கின்றனர்.

> சிறந்த உளமுகாமைத்துவ அபிவிருத்தியானது பரந்த தொழில் கொள்கையை உள்ளிழுத்து நலிந்து போன நாட்டினது பொருளாதாரத்தை நவயுகம் நோக்கி நகர்த்தும்...

எமது சமூகத்தில் காணப்படும் ஊழிய அந்தஸ்த்தில் தனியார் துறைக்கு, அரச துறையிலும் பார்க்கக் குறைவாகவே காணப்படுகின்றது. இத்தகைய உளப்பாங்குகள் சமூகத்தில் மாற்றங்காண வேண்டியதொன்றாகும். இதற்கு தனியார் துறையும் இலாபம் என்ற மூலக் கொள்கையோடு மட்டும் நினறு விடாது, அரசினைப் போனறு ஏனைய சமூக நலன்களையும் முதன்மைப்படுத்துதல் வேண்டும்.

இவற்றைவிட இன்று பொதுத் துறைப் பணிகளில் காணப்படும் முக்கிய பிரச்சினைகள் ஊழல், மோசடி, என்பனவாகும். இத்தகைய செயற்பாடுகளால் பல்வேறு துறைகளில் அவர்கள் தொடர்பான நம்பகத் தன்மையானது பொது மக்களிடையே குறைந்து வருகின்றது. இத்தகைய செயற்பாடானது, அந்தத் துறை தொடர்பான எல்லோரையும் சமூகத்தின் தவறான பார்வைக்குள் உட்படுத்தப் பண்ணி விடுகின்றது.

எனவே தான் பொதுத்துறைப் பணி தொடர்பாகப் பணிகளைத் தேர்வு செய்துகொள்கின்ற ஊழியர்கள், தமது அனுகூலத்தை மட்டும் கருத்தில் கொள்ளாது, தொழில் அனுகூலத்திற்காகவும் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றக் கூடிய தொழில்களைத் தேர்வு செய்தலே சிறந்ததாகும்.

இதேபோல் மாறிமாறி ஆட்சிக்கு வரும் அரசுகளும், தமது அரசியல் சுயநலவாதத்திற்கு ஏற்ப தொழில் கொள்கைகளை வகுத்துக் கொள்ளாது, தூரநோக்குக் கொண்ட சிறந்த பணிக்கொள்கைகளை நிலைப்படுத்தவேண்டும்.

இவ்வாறு இரு பிரிவினரிடையேயும் சிறந்த முன்னேற்றகரமான உளப்பாங்குகள் மாற்றங் காணப்பட்டாலே, ஒரு நாட்டின் சமூக, பொருளாதார அடித்தளங்களை பலமானதாகவும், சிறந்ததாகவும் அமைத்துக் கொள்ளமுடியும்.

இதனால் இந்த நூற்றாண்டிலிருந்து எதிர்காலம் நோக்கிய பயணத்தில் சிறந்த அபிவிருத்தி இலக்கிற்கு பொதுத் துறைப் பணியாளர்களிடையே, அவர்களின் பணி தொடர்பான உளப்பாங்குகளில் பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. அதாவது அவர்களின் உள முகாமைத்துவம் துரித அபிவிருத்தி காணவேண்டும் என்பதே முக்கியமானதாகும். ❄

---

செய்திக்கட்டுரை - பட்டனைந்து

# வருமுன் காப்பது அனைவரதும் கடமையேயாகும்

மழைபெய்து ஓய்ந்தாலும், மழை நீர் வடியாமல் இருக்கும் பல முக்கிய இடங்கள், யாழ்.நகரிலும், புறநகர் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

இதனால் போக்குவரத்தில் பல அசௌகரியங்களை மக்கள் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

நீர் தேங்கிச் சேறாகக் கிடக்கும் பகுதிகளினூடாக வாகனங்கள் செல்கையில், சேற்று நீரைப் பிரயாணிகள் மீது அள்ளித் தெளித்துச் செல்வதால் தினமும் வீதியால் பிரயாணம் செய்பவர்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாவதை அவதானிக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

பாவனையில் இருந்த வடிகால்கள் பலவற்றை காலப் போக்கில் மக்கள் தூர்த்து விட்டதும், மழை நீரை அவ்வப் பகுதிகளில் தேக்கி வைக்கப் பயன்பட்ட குளங்கள், குட்டைகளை குப்பைகளைப் போட்டு நிரப்பி, குடியிருப்புகளாக மாற்றப்பட்டதுமே, யாழ். நகருக்கு ஏற்பட்ட இந்த நிலைக்கு காரணமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.



குறிப்பாக யாழ்ப்பாணம் தட்டாதெருச் சந்தி, கந்தர்மடம் சந்தி, கே.கே.எஸ். வீதியில் மிட்டாய்க் கடைச் சந்தி, நாச்சிமார் கோவிலடி அரசடிச் சந்தி, மானிப்பாய் வீதியில் ஆறுகால்மடம், கொக்குவில் மேற்குச் சந்தி ஆகியவற்றில் மழைபெய்து ஓய்ந்தும் பலமணி நேரத்துக்கு நீர் தேங்கி நிற்கும் நிலை இருந்து வருகிறது.

அதேபோன்று அரசடி வீதி, மானிப்பாய் வீதி, யாழ்.பிரதான வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி ஆகியவற்றின் மருங்குகளில் வீதிகளின் நீளத்துக்கும் மழை நீர் பல நாட்களுக்குத் தேங்கிக் கிடப்பதும் சுட்டிக்காட்டப்படக் கூடிய ஒன்றாகும்.

யாழ்.மத்திய பேருந்து நிலைய வளாகத்துக்குள்ளும் மழைநீர் தேங்கி நிற்பதால் பிரயாணத்தை மேற் கொள்ளும் மக்களுக்கு பலத்த அசௌகரியத்தையே ஏற்படுத்துகிறது.

நல்லூர் செங்குந்தா சந்தைக்குள்ளும் மழை நீர் தேங்கும் நிலைமை பல வருடங்களாக இருந்து வருகிறது.

நாவாந்துறை, பொம்மைவெளி, சூரியவெளி, காக்கைதீவுப் பகுதிகளில் முன்னர் வயல்களாகக் காணப்பட்ட காணிகளில் மக்கள் குடியேறி இருப்பதால் மழை காலங்களில் அவர்களது குடிசைகளும் வெள்ள நீரில் மூழ்கி விடுகின்றன.

மேலும் அந்தப் பகுதியில் நகரின் பல பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களைக் கொட்டி வருவதால் ஏற்படக் கூடிய துர்நாற்றம், நோய்க் கிருமிகளின் தாக்கத்துக்கு ஆளாகி சிறுவர், முதியோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

வருமுன் காப்பது போன்ற நடவடிக்கைகளை அது சம்பந்தமான நிறுவனங்களும், குடியிருப்பாளர்களும் மேற்கொள்ளாமல் ஏனோதானோ என்று இருப்பதாலேயே மழைகாலங்களில் நோய்களுக்கு உள்ளாகி மரணங்கள் ஏற்படவும் ஏதுவாகின்றது.

அதேவேளை, வசதியாக வாழ்கின்ற குடியிருப்புகளில் இருந்து அகற்றப்படுகின்ற மரங்களின் குப்பைகளையும் தத்தமது காணிகளில் போட்டு வைக்கவோ, குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கைகளைக் கைக்கொள்ளாமல் வீதிகளுக்குக் கொண்டு வந்து போட்டு வருவதால், அந்தப் பகுதியில் குப்பை தேங்கிக் கிடந்து கூழமாக மாறி நுளம்பு, ஈ போன்றவற்றைத் தோற்றுவிக்கும் அபாயத்தை விளைவிப்பதையும் நகரப் பகுதிகளில் காணக்கூடியதாக இருந்து வருகிறது.

குருநகர், நாவாந்துறை, பாசையூர், கொழும்புத் துறை ஆகிய பிரதேசங்களில் கடலுணவுக் கழிவுகளை மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் போடுவதால், அவற்றிலிருந்து துர்நாற்றம் வீசி அச்சூழலை மாசுபடுத்துவதை பாவனையாளர்களோ, விற்பனையாளர்களோ, தொழி லாளர்களோ உணர்ந்து செயற்பட்டால் ஓரளவுக்கேனும் தவிர்த்துக்கொள்ளலாமல்லவா?

நகரப் பகுதிகளில் இருந்து யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினரால் சேகரிக்கப்படுகின்ற குப்பை குழங்களைப் போட்டு நிரப்பும் பகுதிகளில் அத்துமீறி குடியேறியவர்களால் தற்சமயம் காட்டப்படுகின்ற எதிர்ப்புக் காரணமாக யாழ் மாநகர சபை அன்றன்றாடு நகரப் பகுதிகளில் இருந்து எடுக்கப்படுகின்ற கழிவுகளைக் கொட்ட இடமில்லாமல் திண்டாடுகின்ற நிலை தோன்றியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை, நகரப் பகுதிகளில் தினமும் சேருகின்ற கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அகற்றக் கூடிய வாகன, தளபாட, ஊழியர்களின் பற்றாக்குறையும் மாநகர சபையின் சுகாதாரப்பிரிவினருக்கு உண்டு.

வருடத்தில் நீண்ட நாட்களான கோடை காலங்களில் வாழ்வை வசந்தமாக நகர்த்தும் நமது யாழ் நகர மக்களின் அன்றாட வாழ்வில், இந்த மழைக் காலம் ஒரு சோதனையான காலமாக அமைந்து வருவதை எதிர்காலத்திலாவது நல்லமுறையில் தீர்த்துக் கொள்ள முன்வந்தால் நல்லதல்லவா?

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்துக்கு நிவாரணத்துக்கு வழங்கப்படும் தீட்டல் பச்சை அரிசி வழங்குவதற்கான கேள்வி கோரல்

1) யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு 2004 செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான தீட்டல்பச்சை அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கென எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேல்குறிப்பிடப் பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வழங் கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு (MT) | | | |
|---|---|---|---|---|---|
| | | 2004 செப்ரெம்பர் | 2004 ஒக்ரோபர் | 2004 நவம்பர் | 2004 டிசெம்பர் |
| 1 | சாவகச்சேரி | 95 | 95 | 95 | 95 |
| 2 | கைதடி | 35 | 35 | 35 | 35 |
| 3 | கொடிகாமம் | 68 | 68 | 68 | 68 |
| 4 | உடுப்பிட்டி | 16 | 16 | 16 | 16 |
| 5 | கட்டைவேலி -நெல்லியடி | 22 | 22 | 22 | 22 |
| 6 | பருத்தித்துறை | 57 | 57 | 57 | 57 |
| 7 | புலோலி | 13 | 13 | 13 | 13 |
| 8 | மருதங்கேணி | 40 | 40 | 40 | 40 |
| 9 | யாழ்ப்பாணம் | 156 | 156 | 156 | 156 |
| 10 | நல்லூர் | 80 | 80 | 80 | 80 |
| 11 | அச்சுவேலி | 77 | 77 | 77 | 77 |
| 12 | நீர்வேலி | 58 | 58 | 58 | 58 |
| 13 | மானிப்பாய் | 66 | 66 | 66 | 66 |
| 14 | பண்டத்தரிப்பு | 45 | 45 | 45 | 45 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 32 | 32 | 32 | 32 |
| 16 | தெல்லிப்பழை | 75 | 75 | 75 | 75 |
| 17 | சங்கானை | 91 | 91 | 91 | 91 |
| 18 | சுன்னாகம் | 98 | 98 | 98 | 98 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 20 | 20 | 20 | 20 |
| 20 | வேலணை | 22 | 22 | 22 | 22 |
| 21 | ஊர்காவற்துறை | 35 | 35 | 35 | 35 |
| 22 | காரைநகர் | 28 | 28 | 28 | 28 |
| 23 | தீவகம் | 06 | 06 | 06 | 06 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 1250 | 1250 | 1250 | 1250 |

2) கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கேற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

3) கேள்விகள் சமர்ப்பிக்க விரும்பும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500 ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2004.11.15 ஆம் திகதி தொடக்கம் 2004.11.29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இந்த வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதி பருடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

4) மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500 ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

5) கேள்வி கோரப்பட்டுள்ள அரிசி தீட்டல் பச்சை அரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

6) பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (க்ணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 29.11.2004 பிற்பகல் 2 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

7) கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "தீட்டல் பச்சை அரிசி வழங்குவதற்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.

8) கேள்வி காரர்கள்(**Bidders**) குறிப்பிடப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

9) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10 வீதம் மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (**Performance Bond**) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

10) கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எந்தக் காரணம் கொண்டும் அதிகமாக இருக்குமாட்டாது.

11) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட செயலகம்,**
**யாழ்ப்பாணம்,**
**12.11.2004**

(சி-3363)

# பலூஜாவில் தீவிரவாதிகள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர்!

## அமெரிக்க இராணுவம் தெரிவிப்பு



ஈராக்கியத் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பலூஜா நகரைத தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் முகமாக கடந்த 5 நாட்களாக பாரிய தாக்குதல்களை மேற்கொண்டு வரும் அமெரிக்க, ஈராக்கியக் கூட் டுப்படையினரால் பல நூற்றுக்கணக் கான தீவிரவாதிகள் சுற்றிவளைக் கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே பலூஜா நகரின் பெரும் பாலான பகுதிகளைக் கைப்பற்றிய அமெரிக்கக் கூட்டுப்படையினருக் கும் ஈராக்கியத் தீவிரவாதிகளுககும் இடையில் பலூஜா நகரின் தென் பகுதியில் பலத்த மோதல்கள் இடம்பெற்றுவந்தன.

பலூஜா நகரின் யூப்பிரட்டிஸ் நதியை அண்மித்த பகுதியில் இரு பக்கங்களாலும் தீவிரவாதிகளைச் சுற்றிவளைத்துள்ள அமெரிக்கப் படையினர், தென்பகுதியில் இருந்து தீவிரவாதிகளை நோக்கி முன்னேறி வருகின்றனர். கடந்த 5 நாட்களாக அமெரிக்கப் படையினரை எதிர்த் துப் போராடிய தீவிரவாதிகள், தற் பொழுது அமெரிக்கப் படையினரது வியூகங்களை உடைத்து வெளியே றிச் செல்வதற்காக முயற்சி செய்து வருகின்றனர்.

இந்நிலையில் பலூஜா நகரின் தென்பகுதியில் இருந்த தீவிரவாதி கள் வெளியேறிச் செல்ல விரும்பி னால் அவர்கள் வெளியேறிச் செல் லும் வரை தாம் காத்திருக்கத் தயா ரென அமெரிக்கப் படையினர் தெரி வித்துள்ளனர்.

இதுவரை இடம்பெற்ற மோதல் களில் 600 இற்கும் மேற்பட்ட தீவிர வாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக வும் அவர்களது உடல்கள் ஆங் காங்கே சிதறிக் கிடப்பதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. ஆனால் கொல் லப்பட்டவர்களுள் பொதுமக்களும் உள்ளடங்கியிருக்கக்கூடும் என சர்வ தேச செய்தி நிறுவனங்கள் அச்சம் தெரிவித்துள்ளன.

இதேசமயம் இதுவரை இடம் பெற்ற மோதல்களில் தமது தரப் பில் 18 அமெரிக்கப் படையினரும் ஐந்து ஈராக்கிய தேசிய காவற் படையினரும் கொல்லப்பட்டுள்ளதா கவும் 178 படையினர் காயமடைந் துள்ளதாகவும் அமெரிக்கப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களது எண்ணிக்கை அமெரிக்கப் படையினரால் அறிவிக் கப்பட்டதைவிட பலமடங்கு அதிகம் என செய்தி ஊடகங்கள் தெரிவித் தன.

இதேசமயம் பலூஜா நகரில் உள்ள அமெரிக்கக் கடற்படைத் தலைமையகம் தீவிரவாதிகளின் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகியி ருப்பதாக பலூஜாவில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் தெரிவித்தார்.

அத்துடன் அமெரிக்கபபடையின ரின் துருப்புக்காவிகள் மீது தீவிர வாதிகள் மேற்கொண்ட தாக்கு தலில் பல அமெரிக்கப் படையினர் படுகாயமடைந்துள்ளனர். பலூஜா நகரினை விட்டு வெளியேறிய பொது மக்கள் ஓரிரு நாட்களில் மீண்டும் தமது சொந்தக் குடியிருப்புக்களுக் குத் திரும்ப முடியும் என அமெரிக் கப் படையதிகாரியான ஜென் றிச் சாட் மையேர்ஸ் தெரிவித்தார்.

இதனிடையே பாக்தாத்தில் இடம் பெற்ற கார்க்குண்டுவெடிப்பில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.




# ஈராக்கின் மொசூல் நகரம் கிளர்ச்சிவாதிகள் வசம்

ஈராக்கின் வடபகுதியில் அமைந் துள்ள மூன்றாவது பெரிய நகரமான மொசூலை கிளர்ச்சிவாதிகள் தாக்கி தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

இந்த நகரம் ஈராக்கிய தேசிய காவற்படையினரின் ஆளுமையின் கீழ் இருந்ததாகும். முகமூடி அணிநத பெருமளவான கிளர்ச்சிவாதிகள் பல பொலிஸ் நிலையங்களைத் தாக்கிக் கைப்பற்றிய பின்னர் அங் கிருந்த பெருமளவான ஆயுதங் களையும் வெடிமருந்துகளையும் எடுத்துச்சென்றுள்ளதுடன் அங்கு நின்ற பொலிஸ் வாகனங்களுக்கும் தீ வைத்துள்ளனர்.

கிளர்ச்சிவாதிகளின் தாக்கு தலையடுத்து மொசூல் நகர ஆளு னர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மொசூலின் தென்பகுதி மீது பாரிய படைநடவடிக்கையொன்று ஆரம்பிக கப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணு வம் தெரிவித்தது. இதன்படி மொசூல் பகுதியில் கடுமையான விமானத் தாக்குதல் இடம்பெற்று வருவதாக வும் இதில் பல கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்த அமெரிக்க இராணுவம், கொல்லப் பட்டவர்களின் தொகையைக் குறிப் பிடவில்லை.




மொசூல் நகர் பொலிஸாரினதோ அல்லது உள்ளூர் அரச நிர்வாகத் தினதோ கட்டுப்பாட்டுக்குள் இல் லையென அப்பகுதி மக்கள் தெரி வித்தனர்.

# பிலிப்பைன்ஸில் ரயில் விபத்து 10 பயணிகள் பலி; 143 பேர் காயம்!




பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட ரயில் விபத்தில் 10 பயணிகள் உயிரிழந் ததுடன் 143 பேர் காயமடைந்த னர். மலையடிவாரத்தால் சென்று கொண்டிருந்த ரயில் - தண்ட வாளத்தை விட்டு விலகியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாகா நகரத்திலிருந்து மணிலா வுக்கு எட்டு ரயில் பெட்டிகளைக் கொண்ட ரயில் நேற்றுமுன்தினமிரவு பயணமானதாகவும், இவ்வாறு வந்த ரயில் இடையிலுள்ள பட்றே போகஸ் என்ற நகரத்தின் மலையடி வார மாகச் சென்றவேளை தண்டவாளத் திலிருந்து தூக்கி வீசப்பட்டதா கவும், இதன்போது ஐந்து பெட்டி கள் தடம்புரண்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இவ்வாறு தடம்புரண்ட ரயில் பெட்டியிலிருந்து 400 பயணிகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதி காரியான றோஜர் பியூன்ரஸ் தெரி வித்தார்.

ரயில் தடம்புரண்ட பகுதியி லிருந்து மீட்புப் பணிகள் யாவும் விரைவாகவே முடிந்துவிட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஈ.பி.டி.பியுடனிருந்தே செயற்படுவதாக கருணாகுழு உறுப்பினர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு பொதுமக்கள் மீது நேற்று முன்தினம் கிளைமோர் மற்றும் கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட அர்ச்சுனன் விஜயகுமார் என்ற இளைஞன் நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது, மேற்படி நபரை 14 நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்டப் பதில் நீதிபதி டி.சி.சின்னையா உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் களுவங்கேணிச் சந்தியில் வைத்து துரைராஜா விமலேந்திரன், நல்லதம்பி பேரின்பராஜா ஆகிய இரு பொதுமக்கள் மீது கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போதும் அது அவர்கள் அவ்விடத்தைக் கடந்ததுமே வெடித்ததால் அவர்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் மேற்படி இருவரும் அதிர்ஷ்டவசமாக இந்த இரு தாக்குதல்களிலிருந்தும் தப்பியதையடுத்து, இவர்கள் இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிளை கைப்பற்றி மேற்படி நபர் தப்பிச் சென்றார்.


இந்தவேளையில், இந்தக் கிளைமோர்த் தாக்குதல் மற்றும் கைக்குண்டுத் தாக்குதல் குறித்த தகவலும், அதனை நடத்திய நபர் ஏறாவூர்ப் பக்கமாகத் தப்பிசெல்வது குறித்த தகவலையும் பொலிஸாருக்குப் பொதுமக்கள் உடனடியாகவே தகவல் தெரிவித்ததையடுத்து மேற்படி நபர் பொலிஸாரால் ஏறாவூரில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.


அவ்வாறு கைது செய்யப்பட்ட நபர், தான் கருணா குழுவைச் சேர்ந்தவர் என்றும் தாங்கள் செங்கலடியிலுள்ள ஈ.பி.டி.பி. முகாமிலிருந்து செயற்படுவதாகவும் தெரிவித்ததாக ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தர்மசேனா ரத்னாயக்கே நீதிபதியிடம் தெரிவித்தார்.


இது பற்றி பொலிஸார் கருத்துத் தெரிவிக்கையில், மேற்படி நபர்தான் இவ்வாறு இயங்குவதற்கான வசதிகளை ஈ.பி.டி.பி.யே ஏற்படுத்தித் தந்துள்ளதாகவும், தான் செங்கலடியிலமைந்துள்ள ஈ.பி.டி.பி. முகாமிலேயே வசித்து வருவதாகவும் தெரிவித்தார்.

எனினும், மேற்படி நபருக்கு எவ்வாறு கிளைமோர்க் குண்டு மற்றும் கைக்குண்டு கிடைத்தன என்பது பற்றி தாம் விசாரித்து வருவதாகவும் தெரிவித்தனர். அத்தோடு, மேற்படி நபர் செங்கலடி ஈ.பி.டி.பி முகாமில் அடிக்கடி காணப்படுவதால் ஈ.பி.டி.பி உறுப்பினராக இருக்கலாம் என தாம் முதலில் சந்தேகம் கொண்டதாகவும், ஆனால தாம் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையின்படி கொலக்கன்னாவெளியைச் சேர்ந்த அருச்சுனன விஜயகுமார் என்ற இந்த 25 வயது நபர் கருணா குழுவைச் சேர்ந்தவர் என்பதும் ஈ.பி.டி.பி. ஆதரவுடன் செயற்படுபவர் என்பதும் தெரியவந்ததாகத் தெரிவித்தனர்.

## நமது ஈழநாடு கிளிநொச்சியில் நடத்தும் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான கருத்தரங்கிலிருந்து சில காட்சிகள்!







## விபத்தில் காயமுற்ற சிறுவன் மரணம்!

(யாழ்ப்பாணம்)

மருதனார் மடம்பகுதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தின்போது படுகாயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் சிகிச்சை பலனளிக்காது நேற்று மரணமானார்.

இணுவிலைச் சேர்ந்த ஆனந்தராஜா சஜிந்தன்(வயது -10) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் வீதியால் சென்றுகொண்டிருந்த சிறுவனை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை சிகிச்சை பலனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளால் மோதிய நபரைப் பிடிப்பதற்கு முற்பட்ட வேளை அவர் அந்த இடத்திலிருந்து தப்பிச்சென்று விட்டதாகத் தெரியவருகிறது.

## மட்டக்களப்பு சிறையிலிருந்த கருணா குழு உறுப்பினருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த மூன்று வார காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கருணா குழு உறுப்பினரான சுட்டி எனப்படும் கண்ணப்பன் கணேசனை பிணையில் செல்ல மட்டக்களப்பு நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

கடந்த 23 ஆம் திகதி இரவு மட்டக்களப்பு - கல்முனை வீதி ஆரையம்பதியில் இரவு தொலை நோக்குக் கருவியுடன் விசேட அதிரடிப்படையினரால் இவர் கைது செய்யப்பட்டார்.

படையினரால் பாவிக்கப்படும் குறிப்பிட்ட கருவியை சட்டவிரோதமாக வைத்திருந்ததாக காத்தான்குடி பொலிஸார் இவர்மீது குற்றம் சுமத்தியிருந்தனர்.

நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இவர் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டபோது, ரூபா 25 ஆயிரம் சரீரப் பிணையில் செல்வதற்கான அனுமதியை பதில் நீதிபதி டி.சி. சின்னையா வழங்கினார்.

இருந்தபோதிலும் பிணையாளிகள் எவரும் முன்வராத நிலையில் மீண்டும் இவர் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## தனித்திருந்த...

நேற்றையதினம் வீட்டில் தனது உடுப்புக்களை எடுப்பதற்காக சென்றவேளை - வீடு பூட்டப்பட்டிருந்ததையடுத்து ஜன்னலினூடாக பார்த்தபோது மேற்படி பெண் இறந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இதனையடுத்து - கோப்பாய் பொலிஸாருக்கு கொடுக்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்றிருந்த பொலிஸார் விசாரணையை மேற் கொண்டதுடன், சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நேற்றிரவு ஒப்படைக்கப்பட்டது.

பிரஸ்தாப பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டும், தலையின் பிற்பகுதியில் காயங்களும் இருப்பதாகத் தெரியவருகிறது.

## தனித்திருந்த பெண்ணை பலாத்காரப்படுத்த முயன்ற மூவருக்கு 2 வருடச்சிறை

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவுவேளை வீட்டினுள் நுழைந்து பெண் ஒருவரை பாலியல் ரீதியாக பலாத்காரப்படுத்த முயன்ற மூவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது.

பருத்தித்துறை லட்சுமணன் தோட்டம் முகாமில் இந்த வருடம் நடுப்பகுதியல் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது -

நாகர் கோவில் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து இந்த முகாமில் தனித்து வாழ்ந்து வந்த குடும்பப் பெண் ஒருவரின் குடிசையினைப் பிரித்து உட்சென்ற மூவர் பெண்ணின் கையைப் பிடித்து பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸாரிடம் பிரஸ்தாப பெண் முறைப்பாடு செய்திருந்தார்.

இவர் மீதான பாலியல் பலாத்கார முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பெயரில் மேற்படி முகாமைச் சேர்ந்த மூவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் நடை பெற்றபோது இவர்கள் மூவர் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதையடுத்து மூவரையும் கடுமையாக எச்சரித்த நீதிபதி இரண்டு வருட கடூழியச் சிறைத்தண் டனை விதித்ததுடன் மூவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

அத்துடன் குற்றவாளிகள் அபராதம் விதித்த பணத்தினை செலுத்த தவறின் மேலும் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படும் எனவும் பணித்தார்.

## அரபாத்தின் பூதவுடல்...

இதனையடுத்து - இராணுவ மரியாதை மற்றும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

நேற்று மாலை ஹெய்ரோவில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் உலகிலுள்ள ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள், மன்னர்கள், வெளிநாட்டமைச்சர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டு அரபாத்தின் பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். எகிப்தில் இடம்பெற்ற இறுதி நிகழ்வுகளில் இஸ்ரேலியப் பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை.

இதனையடுத்து, அரபாத்தின் பூதவுடலைத் தாங்கிய பேழை விசேட ஹெலிகொப்ரர் மூலம் ரமழான் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு பல லட்சக் கணக்கான பலஸ்தீனர்கள் உணர்வு பூர்வமாக ஒன்று கூடியிருந்தனர்.

இதனால், ஹெலிகொப்ரரிலிருந்து அரபாத்தின் உடலை தாங்கிய பேழையை கீழே இறக்குவதற்கு அதிகாரிகள் பெரிதும் சிரமப்பட்டனர். அங்கு கூடியிருந்த லட்சக்கணக்கான மக்களின் நெரிசலைக் கலைப்பதற்காக பலஸ்தீனப் பொலிஸார் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டு பூதவுடல் தாங்கிய பேழையினை எடுத்துச் செல்லும் வழியினை ஏற்படுத்தினர்.

அரபாத்தின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக திரண்டிருந்த இலட்சக் கணக்கான பலஸ்தீனர்களின் உணர்வலைகள் கட்டுக்கடங்காதவைகளாகக் காணப்பட்டன. ரமலாவில் கூடியிருந்த பலஸ்தீனப் பெண்களும் தமது முகத்தில் அடித்தவாறு தேம்பி அழுதனர்.

ரமலா நகரிலுள்ள பலஸ்தீன அதிகார சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இறுதி மரியாதை செலுத்தும் நிகழ்வுகளைத் தொடர்ந்து அரபாத்தின் பூதவுடல் பலஸ்தீன அதிகாரசபை தலைமை அலுவலக வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## புலிகள் சமர்ப்பித்த யோசனை...

பீற்றர்சன் எடுத்து விளக்கினார்.

அத்துடன், சமாதானப் பேச்சு வார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான விடுதலைப் புலிகளின் யோசனை குறித்தும் எடுத்துக் கூறினார்.

இவற்றை செவிமடுத்த ஜனாதிபதி இலங்கை அரசாங்கம் நோர்வே அனுசரணையாளர்களுடன் மிகவும் நெருங்கிய வகையில் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்ததுடன், சமாதானப் பேச்சுக்களில் நோர்வே தொடர்ந்தும் ஈடுபடுவதையிட்டு நன்றியும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையில் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரும், ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் - புலிகளின் விசேட செய்தி ஜனாதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டபோது அதற்கான பதிலை அவர் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் - நோர்வேத் தரப்பினர் மீளவும் வன்னிக்குச் செல்லாமல் இன்று நோர்வேக்குச் செல்லவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில், ஜனாதிபதியுடனான சந்திப்பை முடித்துக் கொண்ட ஜான் பீற்றர்சன் அரபாத்தின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் இரவே எகிப்தின் தலைநகர் ஹெய்ரோவுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தனித்துவமான தலைமையின் கீழ் தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்



'இன்று தமிழினம் உறுதி, தனித்துவம் மிக்க தலைமையின் கீழ் தலை நிமிர்ந்து நிற்கிறது'.

இவ்வாறு தென்மராட்சியில் இடம்பெற்ற தேசிய எழுச்சிப்பேரவை சங்கம நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்தார்.

இன்று தமிழினம் ஒரு வலிமை மிகுந்த பெரும் அரசியல் சக்தியாக உறுதியானதும், தனித்துவம் மிக்கதுமான ஒரு தலைமையின் கீழ் நாடாளுமன்றத்தில் வீற்றிருக்கிறது.

பல்வேறு சோதனைகளுக்கும், அர்ப்பணிப்புக்களுக்கும் மத்தியில் எமது விடுதலை இயக்கம் யுத்த நிறுத்தத்தைப் பேணிவருவது கண்டு உலகமே வியக்கிறது.

எமது உரிமைகளைப் பெறுவதற்கு மன்றாடும் நிலையில் இன்று இல்லை. தரமுடியாது எனச் சொல்வதற்கும் ஏகாதிபத்திய இனத்திற்கும் அதிகாரமில்லை என்பதை சந்திரிகா முதல் ரணில் .விக்கிரமசிங்க வரை நன்றாகப் புரிந்துள்ளார்கள்.

தமிழ்மக்களின் பின்னால் வரக்கூடிய சவால்களை சமாளிப்பதற்கும், சந்திப்பதற்கும் எப்போதும் எமது படைகள் தயார் நிலையில் இருப்பதே இவற்றிற்குக் காரணம்.

சமாதான முயற்சிகளுக்கு புலிகள் எப்போதும் இணங்கி வந்திருக்கிறார்கள், இன்றும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இனவெறி சிங்கள தலைவர்களோ அந்த நிலையில் இல்லை. கால இழுத்தடிப்பு செய்து பிரச்சினையின் போக்கை வேறு திசைக்குக் கொண்டுசென்று புலிகள் மீது பழிசுமத்தத் திட்டமிடுகிறார்கள்.

புலிகள் பேச்சுமேசைக்கு வரவில்லை, புலிகளின் இடைக்கால தன்னாட்சி பிரேரணை தனிநாட்டு அலகுக்கான மாற்றுத்திட்டம் என்று பொய்ப்பிரசாரங்களை இலங்கை அரசும், இனவெறி பிடித்த பௌத்த அமைப்புக்களும், தமிழின துரோகிகளும் இணைந்து நடத்தும் பிரசார நடவடிக்கைகளால் சமாதான முயற்சிகள் இன்று அதன் தடத்திலிருந்து விலகிச்செல்கின்றது.

சர்வதேச ரீதியிலும், இராணுவ பலத்தை அதிகரிக்க அரசு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது எனத் தெரிவித்தார். (17)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்



பெயர் : ஜோ.சாருகா
முகவரி : அல்வாய்.

இரண்டாவது அகவையில்



பெயர் : பா.தேவிகா
முகவரி : புதுக்குடியிருப்பு

இரண்டாவது அகவையில்



பெயர் : வி.கோபிராஜ்
முகவரி : நீர்வேலி

இரண்டாவது அகவையில்



பெயர் : பா.ஆர்த்திகா
முகவரி : அல்வாய்.

மூன்றாவது அகவையில்



பெயர் : ச.பிரவீனா
முகவரி : சுழிபுரம்.

நான்காவது அகவையில்



பெயர் : வி.வினோபா
முகவரி : நீர்வேலி.


# சின்னஞ்சிறு செய்திகள்

### வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள பிரதான வீதிகளைப் புனரமைப்பதற்கு 'நீரப்' திட்டம் நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்தப் பகுதியில் மிக முக்கியமான வீதிகளை புனரமைக்க 4.4 மில்லியன் ரூபாவை 'நீரப்' நிறுவனம் ஒதுக்கியுள்ளது. (17)

### வல்லிபுர ஆலயத்தில் சொற்பொழிவு

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிற்றுக் கிழமை தோறும் நடைபெற்று வரும் சொற்பொழிவுத் தொடரில் நாளை காலை 10 மணி பூசை நிறைவுற்றதும் 'அவதார மகிமை' என்னும் தலைப்பில் பஞ்சலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார். (14)

### புடவைகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தீபாவளி தினத்தன்று சந்நிதியான் ஆசிரமத்தில் 75 முதியோருக்கு புதிய உடுபுடவைகள் வழங்கப்பட்டன.

ஆலய சூழலிலுள்ள மடங்களில் தங்கியுள்ள முதியோர்களுக்கே இந்தப் புடவைகள் வழங்கப்பட்டன. (14)

### முன்பள்ளி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

வடமராட்சி கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் முன்பள்ளி கட்டட வேலைக்கு 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை 2004 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்ட நிதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவநேசன் ஒதுக்கியுள்ளார். (20)

### கந்தசஷ்டி கால சிறப்பு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு, சந்நிதியான் ஆசிரமத்தில் காலைப் பூசைகள் நிறைவுற்றதும் இரா.செல்வவடிவேலின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

கந்தசஷ்டி விரத ஆரம்ப நாளான இன்று முதல் தொடர்ந்து ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய நான்கு நாட்களும் சொற்பொழிவு நடைபெறவுள்ளன. (14)

### அரியாலையில் கோழிகள் திருட்டு

அரியாலையின் முள்ளி, பொன்னம்பலம் வீதி, யூதா கோயிலடிப் பகுதிகளில் உள்ள பல வீடுகளில் கோழிகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பகுதிகளில் கடந்த காலங்களாக சட்டவிரோதமாக மணல் அகழப்படும் செயல்கள் அதிகரித்துக் காணப்பட்டன. ஆனால் தற்போது பொலிஸார் இது குறித்து விழிப்பாக உள்ளதால், சட்டவிரோத மணல் அகழ்வு சற்றுக் குறைந்துள்ள இந்த நேரத்தில், கோழித் திருடர்களின் தொல்லை அண்மையில் அதிகரித்து வருகிறது. (55)

### உத்தியோகத்தர்கள் இடமாற்றம்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் குடியேற்ற உத்தியோகத்தராகக் கடமையாற்றிய சிவசுப்பிரமணியம் 01.01.2005 முதல் ஒன்பது மாதங்களுக்குத் தற்காலிகமாக கரைச்சி பிரதேச செயலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

காணி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ச.நவராசா ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் பணிமனைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட காணி வேலைகள் அனைத்தும் வி. சந்திரதேவாவினால் மேற்கொள்ளப்படும் எனவும் மாகாணக் காணி ஆணையாளர் ஆர்.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (24)

### கோயிலாக்கண்டி குடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன

கோயிலாக்கண்டி பகுதியில் பிரதான வீதியை ஊடறுத்துச் செல்லும் நீர் செல்லும் குழாய்கள் 2001 ஆம் ஆண்டில் அகற்றப்பட்டமையால், தற்போது பெய்யும் மழை வெள்ளம் குடியிருப்புக்களில் புகுந்துள்ளது.

கோயிலாக்கண்டி கிருஷ்ணன் கோயில் சுற்றுப் பிரதேசமே வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. ஐம்பதுக்கு மேற்பட்ட குடியிருப்புக்களில் வெள்ளம் புகுந்துள்ளதனால் இந்தப் பகுதி பெரும இன்னல்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டு, வெள்ளம் பாய்வதற்கு மாற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(17)

பெண் பட்டதாரி பயிலுநர்களுக்கு

# பிரசவகால விடுமுறையாக 84 நாட்கள் வழங்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

பட்டதாரிப் பயிற்சித் திட்டத்தில் இணைந்துள்ள பெண் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு பிரசவகால விடுமுறையாக 84 வேலை நாட்கள் வழங்கப்படவேண்டுமென, நிதியமைச்சின் திறைசேரி பிரதிச் செயலாளர் எஸ்.வி.திவாகரத்ன அறிவித்துள்ளார்.

இதற்கான மருத்துவ சான்றிதழை சம்பந்தப்பட்ட இணைப்பாளர்களுக்கு வழங்குவதன் மூலம் இந்த விடுமுறை நாளைப் பெற்றுக் கொள்ளலாம் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பட்டதாரி பயிற்சித் திட்டத்தின் இணைப்பாளர்களுக்கும், மாவட்ட செயலாளர்களுக்கும் இந்தக் கடிதத்தின் பிரதிகள் செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பட்டதாரிப் பயிற்சிநெறியில் இணைந்துள்ள பட்டதாரி பயிலுநர்கள் பயிற்சி ஆரம்பித்து, தொடர்ச்சியாக 7 நாட்கள் விரிவுரைகளுக்கு சமூகமளிக்காது விட்டால் இடைநிறுத்தப்படுவர்.

எனவே, விசேட காரணங்கள் இருப்பின் கொழும்பு முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக அனுப்பி, அனுமதியைப் பெற்றபின்னரே பயிற்சிநெறியில் இணைந்துகொள்ள முடியுமெனவும், நிதியமைச்சின் திறைசேரி பிரதிச் செயலாளர் எஸ்.வி.திவாகரத்ன அறிவித்துள்ளார். (91)

தரமுயர்த்தப்படவுள்ள

# கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் விபரங்கள் 15 ஆம் திகதி வெளியாகும்

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 2 ஆம் வகுப்பிலுள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு அடிப்படையிலான பெயர் விபரங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி கல்வி அமைச்சால் வெளியிடப்படவுள்ளது.

இந்தப் பெயர் விபரங்கள இத்திகதியில் இருந்து மாகாணக் கல்வித் திணைக்களங்களிலும், கல்வி அமைச்சிலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் எனவும், அத்துடன் கல்வி அமைச்சின் w.w.w. Moe. gov.lk என்ற இணையத்தள முகவரியிலும் பார்வையிட முடியும் எனவும், கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் அறிவித்துள்ளார்.

இவை சம்பந்தமான முறைப்பாடுகள் இருப்பின் இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன்பாகத் தனக்கு அறியத்தருமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார். (31)

பொதுசன மாதாந்த

# கொடுப்பனவுப் பட்டியல்களை தபாலகத்துக்கு அனுப்ப கோரிக்கை

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களது 2004, நவம்பர், டிசம்பர் மாதக் கொடுப்பனவுப் பட்டியல்களை ஒன்றாக தபாலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு, வடக்கு-கிழக்கு மாகாண சமூக நலத்துறைப் பணியாளர் என்.ஆர். ரஞ்சினி சகல பிரதேச செயலகங்களுக்கும் கடிதம மூலம் அறிவித்துள்ளார்.

வருட முடிவுக்குள் தபாலகங்களுக்குரிய கட்டுநிதியை வழங்கி கணக்குகளை முடிப்பதற்கு வசதியாகவே இந்த நடைமுறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இதன்படி தென்மராட்சிப் பிரதேச செயலகம் மூலம் இந்தக் கொடுப்பனவுகளைப் பெறுபவர்களுக்கான நவம்பர், டிசம்பர் மாதக் கொடுப்பனவுகளை அந்தந்தத் தபாலகங்கள் மூலம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பெறக்கூடியதாக இருக்குமென சமூகசேவைப் பகுதியினர் தெரிவித்தனர். (24)

தென்னை நாற்று

# விற்பனை நிலையங்களை பதிவுசெய்ய நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச்செய்கை சபையால் உற்பத்தி செய்யப்படும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உயர் இன தென்னம் நாற்றுக்களை மானிய விலையில் விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையங்களை நாடு முழுவதிலும் பதிவுசெய்வதற்கு பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஆர்வமுள்ள அரச, தனியார் மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக தலைவர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை, 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (31)



யாழ்.கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் தீவக வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லாஸ் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் ஆசிரியர் சுபநாதனையும் படத்தில் காணலாம். (91)

# புதிய தமிழீழ சட்டக்கல்லூரி ஆலவிருட்சமாக வளரவேண்டும்

## கலாநிதி சோமஸ்கந்தன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

இலங்கையின் நீதி நிர்வாக பொலிஸ் படையின் செயற்பாட்டை விட தமிழீழ நீதி நிர்வாக, காவல் துறையினர் சிறப்பாக செயற்படுவதாக கலாநிதி சோமஸ்கந்தன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் சட்டக்கல்லூரியைத் திறப்பு விழாவில் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஒரு நாட்டில் நீதி, நிர்வாகம் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றதா என கேள்விகள் எழும் போது, சிறப்பாக நடைபெறுகிறது என பதில் கிடைத்தால், அந்த நாடு சிறந்த நாடாக ஏற்றுக்கொள்ளப்படும்.

நீதித்துறையில் மக்கள் பூரண நம்பிக்கை வைக்கவேண்டும். எமது அயல் நாடான இலங்கையில் நீதித்துறை நம்பிக்கையிழந்து விட்டது. இந்த விடயம் மிகவும் பாரதூரமான ஒன்றாகும். இலங்கையில் மூன்று விடயங்கள் ஊழலில் மிதககிறது. அவை - நீதித்துறை, பொலிஸ் படை, சுகாதாரம் என்பனவாகும்.

தமிழீழத்தில் இவ்வாறான ஊழல் இல்லை. எமது நீதி நிர்வாகம், சட்ட ஒழுங்கு மிகவும் சிறப்பான நிலையில் உள்ளன.

எமது சட்டம் தொடர்பான புத்தகம் ஒன்று லண்டன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளமை சிறப்புக்குரியதாகும்.

இதன்படி நாம் இன்று சர்வதேச அளவில் மிகவும் முக்கியமானவர்களாக இருக்கிறோம். இந்த நீதி நிர்வாகம் சகல துறைகளில் விரிவடைய வேண்டும் என நான் விரும்புகிறேன்.

தமிழீழ நீதிமன்றத்தில் முடிந்த வழக்குகளின் சட்ட அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். இலங்கையில் முடிந்த வழங்குகளின் சட்ட அறிக்கையை முதன் முதலில் எழுதியவர் ஒரு தமிழன்.

எனவே, இந்தச் சட்டக் கல்லூரி பெரிய ஆலமர விருட்சமாக வளர வேண்டுமென்று வாழ்த்துகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நடமாடும் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத்தில் பிரதேச சபையினரால் நடமாடும் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை நடைபெற்று வருகிறது.

கடந்த 2 ஆம் திகதி பூநகரி கௌதாரிமுனையிலும், 4 ஆம் திகதி பூநகரி - நல்லூரிலும், 9 ஆம் திகதி ஞானிமடத்திலும், நேற்று பள்ளிக்குடாவிலும் நடைபெற்றன.

தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி கௌதாரிமுனையிலும், 20 ஆம் திகதி ஞானிமடத்திலும் இந்தச் சேவை இடம்பெறவுள்ளது.




## தொடர் மழை காரணமாக

# வடமராட்சி கிழக்கு மக்களின் இயல்புநிலை வெகுவாக பாதிப்பு

(வடமராட்சி)

கடந்த சில நாட்களாக வீசிய கடும் காற்று, மழை காரணமாக வடமராட்சி கிழக்குக் கிராமங்களில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை தொடர்ந்து பெய்தமையால், தாழ்நிலப் பகுதிகளிலுள்ள வீடுகள், குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடற்கரை வீதியை மூடி வெள்ளம் நிற்பதால், இந்தப் பகுதிப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கேவில் - கட்டைக்காடு சந்தியில் இருந்து ஆரம்பிக்கும் முகமாலை, புளியங்குளம் பயணிகள் பஸ் சேவை கடந்த இரண்டு நாட்களாக வெற்றிலைக்கேணி சந்தியிலிருந்து ஆரம்பிப்பதனால், கட்டைக்காடு, கேவில், போக்கறுப்பு, நித்தியவெட்டை, பூனைத்தொடுவாய் கிராம மக்கள் வெகுசிரமத்தின் மத்தியில் பல மைல் தூரம் நடந்து வந்து பிரயாணத்தைத் தொடர்கின்றனர்.

இவ்வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்குரிய நுகர்ச்சிப் பொருட்களை கட்டைக்காடு, கேவில் கிராமங்களுக்குக் கொண்டுசெல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடும் காற்றுக் காரணமாக உடுத்துறை ஆரம்ப சுகாதார நிலையம், உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லக் கட்டடக் கூரைகள் அரை கிலோமீற்றருக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டதுடன், கடற்கரையோரங்களில் அமைந்துள்ள வீடுகளின் கூரைகளும் சேதமடைந்தன. கடும் காற்றுக் காரணமாக கடற்தொழிலாளர்கள் எவரும் கடலுக்குச் செல்லவில்லை.

நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து மழை பெய்ததால் வயல்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடும் மழை காரணமாக அண்மையில் நடைபெற்ற சைவசமயப் பாடப் பரீட்சைக்கு, மாணவர்கள் நனைந்த நிலையிலேயே பரீட்சை எழுதியதைக் காணக்கூடியதாகவிருந்தது. (21)

# பூநகரி - இராணுவ கூட்டுப்படைத்தள வெற்றிவிழா நிறைவுநாள் இன்று!

(பூநகரி)

பூநகரி இராணுவ கூட்டுப்படைத் தளத்தை தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்ட 11 ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

1993 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் பூநகரி இராணுவ கூட்டுப் படைத்தளம் தவளை நடவடிக்கையின் போது வெற்றி கொள்ளப்பட்டது. இந்தப் படைத் தளத்தில் இருந்த இராணுவத்தினர் பல ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களை கொன்றொழித்தனர்.

பூநகரி மண்ணில் பதியப்பட்ட இந்த வெற்றிச் சமர் விடுதலைப் புலிகளின் புரட்சிகர ஆயுதப்போரை ஒரு புதிய படிநிலைக்கு முன்னோக்கி நகர்த்தியதுடன், இரண்டாம் கட்ட ஈழப்போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கை எட்டிப்பிடித்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஓர் அடிக்கல்லாக அமைந்தது.

இந்த வெற்றிச்சமரின் பக்கத் துணையாக பலாலி பெரும் படைத் தளத்தினுள் ஊடுருவி கரும்புலித் தாக்குதல் ஒன்று விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டது. பூநகரி கூட்டுப் படைத்தளத்தினுள்ளும், பலாலி பெரும் படைத்தளத்தினுள்ளும் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 கரும் புலிகள் வீரகாவியமாகினர்.

பூநகரி மீட்புச் சமரின் போது 458 மாவீரர்கள் தமது உயிர்களை விதையாக கொடுத்து வீரகாவியமாகினர்.

இந்த வெற்றிச் சமரின் 11 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு - இன்று பிற்பகல் 4 மணிக்கு பூநகரி வாடியடியில் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகளைப் பூநகரி வெற்றி விழா செயற்பாட்டுக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# களிமண் வீதி புனரமைக்கப்படாமையால் பொதுமக்கள் பெரும் அசௌகரியம்!

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன நிதியுதவியுடன் நடைபெற்று வந்த கட்டைக்காடு - சுண்டிக்குளம் களிமண் வீதி வேலை முடிவுறாமையால், இந்தக் கடற்கரை வீதியில் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியால் சைக்கிள்கள்கூட செல்லமுடியாத காரணத்தால் முள்ளியான் - சுண்டிக்குளம் உப அஞ்சல் அலுவலகங்களுக்கிடையிலான தபால் பொதி மாற்றம் வெகு சிரமங்களுக்கு மத்தியிலேயே நடைபெற்று வருகிறது. (21)



கனடா - மொன்றியலிலுள்ள அழுதகலசம் அறநெறிக் கழகமும், வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்தி சபையும் இணைந்து வவுனியா மாவட்டத்தில் கல்வி கற்கும் திறமையுள்ள வறிய மாணவர்களுக்கு நிதி வழங்கும் நிகழ்வில் கிராமசேவையாளரான எஸ்.முத்துராசா, வீ.ஜெயசோதிநாதன், வவுனியா மாணவ அமைப்பு மாவட்ட பொறுப்பாளர் சுபாஸ், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், வினோநோகராதலிங்கம் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

படம் - கனகரவி

# சின்னஞ்சிறு செய்திகள்

## 150 தொழிலாளருக்கு உடுபுடவை

(பளை)

பளைப் பிரதேசத்தின் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் தீபாவளி தினத்தை முன்னிட்டு, சிறந்த முறையில் தொழிற்படும் 150 தொழிலாளர்களுக்கு உடுபுடவையும், பணமும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு பளைப் பிரதேச பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த அன்பளிப்பை பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் க.புவனேந்திரம் வழங்கினார்.

## இயங்காத நிலையில் மட்டுவில் நாடு பாடசாலை

(பூநகரி)

பூநகரி - மட்டுவில் நாடு பாடசாலை இதுவரை ஆரம்பிக்கப்படாத நிலையில் உள்ளது.

இந்தப் பாடசாலையின் கட்டட வேலைகள் பூர்த்தியாகி 4 மாதங்கள் ஆன நிலையிலும் பாடசாலை ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் இந்தப் பகுதியில் உள்ள தரம் 1 முதல் தரம் 5 வரையான 65 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதுடன், அவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிப்படைந்துள்ளன.

## பாடசாலை மாணவர்களுக்கான கண், காது சிகிச்சை

(பூநகரி)

பூநகரி கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கண், காது சிகிச்சைகள் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

கண் சிகிச்சை பூநகரி மகா வித்தியாலயத்திலும், காதுக்கான சிகிச்சை பூநகரி பிரதேச செயலகத்திலும் இடம்பெற்றன. இந்தச் சிகிச்சையில் பூநகரி மகா வித்தியாலய சுண்ணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, முட்கொம்பன் ஊற்றுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை போன்ற பாடசாலை மாணவர்கள் பயன்பெற்றனர்.

## குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

மன்னார் - பெரியமடு, பாலம்பிட்டி வீதி புனரமைக்கப்படாத நிலையில் மிக மோசமாக பழுதடைந்துள்ளதால் மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது. பெரியமடுவில் இருந்து பாலம்பிட்டி வரையான 15 கிலோமீற்றர் நீள வீதி தற்காலிகமாக கிரவல் மண் பரவப்பட்டு புனரமைக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது இந்த வீதி பாரிய குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியினூடாக பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## 10 ஆயிரம் பனம் விதைகள் நடுகை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கின் எல்லைப்புறக் கிராமங்களான- கேவில், முள்ளியான், போக்கறுப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 10 ஆயிரம் பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு பனை- தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கத்தினரும், கடற்புலிகளின் அரசியற்துறையினரும் இணைந்து பனம் விதை நடுகையை மேற்கொண்டனர்.

போர் நடவடிக்கை காரணமாக இந்தப் பிரதேசத்தில் உள்ள பனை மரங்கள் அனைத்தும் முற்றாக அழிந்துள்ளதையடுத்தே, இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (122)

## புனரமைக்கப்படாத நிலையில் பிரதான வீதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரிலிருந்து உருத திரபுரீஸ்வரம் வரையுள்ள பிரதான வீதி, கடந்த 20 வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகிறது.

இந்த வீதியிலுள்ள மதகுகளும் சேதமுற்று இருப்பதுடன், ஆரோகணம் இல்லத்துக்கும் - எட்டாம் வாய்க்கால் மதுபான நிலையத்துக்கும் இடையிலுள்ள வீதியும் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

இந்தப் பகுதியை நேரடியாக பார்க்கும்போது பெரும் அபாயமாக காணப்படுகின்றது. இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் செப்பனிட மாட்டார்களா என இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

(கோப்பாய்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு, கோப்பாய் எழுச்சிப் பேரவையினரால் எதிர்வரும் 23 ஆம் திகதியன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் மாலை 2 மணியளவில் கோப்பாய் பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப் படவுள்ளனர்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும், இசைக் கச்சேரிகளும் இடம்பெறவுள்ளன.

## விசர்நாய் கடித்தது

(கிளிநொச்சி)

அக்கராயன் 8 ஆம் கட்டை போசாக்கு நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 3 வயதுக் குழந்தையொன்றை விசர் நாய் கடித்துக் குதறியது. இதனால் படுகாயமடைந்த குழந்தை அக்கராயன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டது.

மேலும் போசாக்கு நிலைய பகுதிகளில் கட்டாக்காலியாக நாய்கள் நடமாடுவதை அவதானிக்க முடிகிறது.

## பற்றைகள் நிறைந்து காணப்படும் ஜெயபுரம் சந்தை

(பூநகரி)

பூநகரி - ஜெயபுரம் சந்தைப் பகுதி பற்றைகளாகக் காணப்படுவதால், சுகாதார நடைமுறைகள் பேணப்படாத நிலையில் உள்ளன. இதனால் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தைப்பகுதியை பிரதேச சபையினர் தகுந்த முறையில் பராமரிப்பதில்லை என இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## இரண்டு நாள் பயிற்சி

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கம் விளையாட்டுக்கழக உறுப்பினர் மற்றும் சமூக நலனில் அக்கறையுடைய அமைப்பினருக்கும் 'சிறுவர் நலனைப் பாதுகாத்தல்' என்ற கருப்பொருளில் 2 நாள் பயிற்சி நெறி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றது.